www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 31 மே '89
1 - 15 ஜூன் '89

4-13-14

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com



அமைப்புச் செய்தி: [redacted]

# மே நாள் அணிவகுப்பு -பொதுக்கூட்டங்கள்

★ மே நாள் பேரணியும் பொதுக்கூட்டமும் தஞ்சையில் எழுச்சியுடன் நடத்தப்பட்டது. மே நாளன்று காலை திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள இளங்காடு கிராமத்திலிருந்து விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களின் சைக்கிள் பேரணி புறப்பட்டு இளங்காடு, வரகூர், கண்டியூர் ஆகிய இடங்களில் வி.வி.மு. கொடியேற்றி வழி யெங்கும் விண்ணதிர முழங்கியபடியே சைக்கிள் பேரணி தஞ்சையை வந்தடைந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வி.வி.மு. திருவையாறு ஒன்றிய அமைப்பாளர் தோழர் ஜெயசீலனும், தஞ்சை மக்கள் கலை இலக் கியக் கழக செயலர் தோழர் காளியப்பனும் சிறப்பு ரையாற்றினர். ம.க.இ.க; வி.வி.மு. தோழர்கள் புரட்சிகரப் பாடல்களை பாடி புரட்சிகர உணர்வுக் குப் புதுரத்தம் பாய்ச்சினர்.

★ உத்தமபாளையம் வட்டம், விவசாயிகள் விடுதலை முன்னணி மே நாளன்று "சாதியின் பெயரால் சலுகை கொடுத்து உழைக்கும் மக்களின் பிரிவினைக்கு விதை ஊன்றும் கருணாநிதியின் சதியை முறியடிப்போம்! கூடங்குளம் அணு மின் நிலையத்தைத் துவக்கி தமிழகத்தை செர்னோபில் ஆக்காதே! விவசாயிகளின் விடுதலைக்கான பாதை நக்சல்பாரி ஆயுதப் போராட்டப் பாதையே! - முதலான முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகளை பகுதியில் ஒட்டியது. அன்று மாலை தே.மீனாட்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டதில் தோழர்கள் பழனிச்சாமி, மோகன் ஆகி யோர் சிறப்புரையாற்ற, கலைக்குழு தோழர்கள் எழுச்சிமிகு புரட்சிகர கலை நிகழ்ச்சி நடத்தினர். எளிமையாகவும், வர்க்க உணர்வுடனும், எழுச்சி யுடன் நடைபெற்ற பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச் சியை பகுதிவாழ் மக்கள் வரவேற்று ஆதரித்தனர்.

★ உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தை மகச் சிறப்பான முறையில் அனைவரை யும் கவரும் விதமாகவும், அணிகளுக்கு உத்வே கம் அளிக்கும் விதமாகவும் கல்லை வட்ட விவசா யிகள் விடுதலை முன்னணி நடத்தியது. மாட்டு வண்டியின் இருபக்கமும் கருத்துப் படங்கள் கொண்ட பலகைகளைக் கட்டிக் கொண்டு இரா ணுவ இசையையும், அனைத்துலகப் பாட்டாளி வர்க்க கீதத்தையும் இசைத்துக் கொண்டு தோழர் கள் செங்கொடிகளுடன் முழக்கமிட்டபடியே சங் கராபுரத்தை வலமாக வந்து பொதுக்கூட்ட மேடையை அடைந்தனர். இந்த அணிவகுப்பில் 150க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட னர். இந்த அணிவகுப்பு தோழர்களுக்கு ஒரு உத் வேகத்தையும், மக்கள் மத்தியில் வியப்பு கலந்த ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. அணிவகுப்பைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் மாணிக்கம் தலைமை ஏற்றார். தோழர் நாகராசன், வி.வி.மு. அமைப்பாளர் தோழர் கதிர் வேலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். புரட்சிக ரப் பாடல்களை தோழர்கள் எழுச்சிகரமாகப் பாடி னர். திரளான மக்கள் பொதுக்கூட்டதிற்கு வந்தி ருந்து சிறப்பித்தனர்.

★ மதுரை நகரில் மக்கள் கலை இலக்கியக் கழ கத்தின் பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் சம் மட்டிபுரம் பிரதான வீதியில் எழுச்சியுடன் நடை பெற்றது. தோழர் கணேஷ் தலைமை தாங்க, தோழர்கள் எழில்மாறன், சேகர் ஆகியோர் சிறப்பு ரையாற்றினர். பகுதி தோழர்களின் சுய முயற்சியு டன் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. குறிப் பாக "ஏழை மக்களைப் பாதுகாக்க போலீஸ் இருக்கா?" என்ற பாடல் நல்ல வரவேற்பைப் பெற்றது. பகுதிவாழ் மக்கள் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

★ கம்பம் நகர புதிய ஜனநாயகம் வாசகர் வட் டம் மே நாளன்று சுவரொட்டி இயக்கத்தை நடத்தி யது. "சாதியின் பெயரால் சலுகைகள் கொடுத்து உழைக்கும் மக்களை கூறுபோடும் கருணாநிதி யின் சதியை முறியடிப்போம்! கூடங்குளம் அணு மின் நிலையத்தைத் துவக்கி தமிழகத்தை செர்னோ பில் ஆக்காதே! விவசாயிகள் - தொழிலாளர்க ளின் விடுதலைக்கான பாதை நக்சல்பாரி புரட்சிப் பாதையே!" - ஆகிய முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பகுதிவாழ் மக்க ளின் வெகுவாக வரவேற்று ஆதரித்தனர்.

★ ஊற்றங்கரை புதிய ஜனநாயகம் வசாகர் வட்டம் மே நாளன்று சுவரொட்டி இயக்கத்தை நடத்தியது.

புதிய ஜனநாயக வாசகர் வட்டமும், முற் போக்கு இளைஞர் அணியும் இணைந்து 12.5.89 அன்று மாலை 7 மணியளவில் மே தினப் பொதுக் கூட்டம் கலை நிகழ்ச்சியை நடத்தின. தோழர் சுப் பிரமணி தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில், ஊற்றங்கரை கூட்டுறவு நூற்பாலை யில் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதை எதிர்த்தும், தொழிலாளர்கள் புரட்சிகர தொழிற் சங்கதை நிறுவிப் போராட வேண்டிய அவசி யத்தை விளக்கியும், மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தோழர் பாலனும், புதிய ஜனநாயக வாச கர் வட்டத்தின் சார்பில் தோழர் அன்புவும் உரை யாற்றினர். இடையிடையே மக்கள் கலை மன்றத் தைச் சேர்ந்த தோழர் சந்திரா குழுவினரின் புரட்சி கர கலைநிகழ்ச்சி நடைபெற்றது. மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர் இந்திரஜித், முற்போக்கு இளைஞர் அணி தோழர் மணிவாசகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திரளாக உழைக்கும் மக்கள் பங்கேற்ற இப்பொதுக்கூட்டம் பாட்டாளி வர்க்க சர்வ தேசிய கீதத்துடன் நிறைவடைந்தது.

★ சென்னையில் மக்கள் கலை இலக்கியக் கழ கம் மே நாள் ஊர்வலம், பொதுக்கூட்டத்தை எழுச் சியுடன் நடத்தியது. மே நாளன்று மாலை 5 மணிய ளவில் ரயில் பெட்டித் தொழிற்சாலை (ஷெல்) நுழைவாயில் முனையிலிருந்து, செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க விண்ணதிர முழக்கங்க ளுடன் தொடங்கி ஊர்வலம் தொழிலாளர் குடியி ருப்புப் பகுதிகளில் நுழைந்து மார்கெட் வழியே வில்லிவாக்கம் பேருந்து நிலையமருகே பொதுக் கூட்டத் திடலைச் சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் முகுந் தன் தலைமையேற்றார். சிறப்புரையாற்றிய சென்னை ம.க.இ.க. அமைப்பாளர் தோழர் சீனி வாசன், மக்களின் அடிப்படை உரி மைகள் பறிக்கப்பட்டு பாசிச அபாயம் பெருகிவ ருவதையும், பூதாகரமாகப் பெருகிவரும் ஏகாதி பத்தியச் சுரண்டலையும், ஓட்டுக் கட்சிகளின் பித்த லாட்டத்தையும் பகுதிப் பிரச்சினைகளோடு இணைத்து போர்குணத்தோடு பேசினார். புதிய ஜனநாயகம் ஆசிரியர் தோழர் மதியழகன், இன் றைய மஞ்சள் - மசாலா பத்திரிக்கைகள் ஏற்படுத்தி வரும் சீரழிவையும் புரட்சிகர பத்திரிக்கைகளின் அவசியத்தையும் விளக்கி சுருக்கமாக உரையாற் றினார். பின்னர் நடை பெற்ற கலை நிகழ்ச்சியும், குறிப்பாக 6 வயது குட்டித் தோழர் தியாகு பாடிய "படிக்கக்கூட வழியுமில்லே நாட்டிலே..." என்ற பாடலும் மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற் றது. ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட பகுதி வாழ் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## துரிஞ்சாபுரம் ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி துவக்கவிழா

திருவண்ணாமலை அருகிலுள்ள மங்க லம் கிராமத்தில் 8.5.89 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணியின் துவக்கவிழா பொதுக்கூட்டமும் இசை நிகழ்ச்சியும் சிறப் பாக நடைபெற்றன. மாலை 6.30 மணியள வில் கல்லை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் தலைமையில், அமைப் பின் சின்னம் பொறித்த செங்கொடியை தோழர் பழநி ஏற்றி வைத்தார். தியாகிக ளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. பின் னர் 7 மணியளவில் தோழர் பழநி தலைமை யில் பொதுக்கூட்டம் துவங்கியது. திரு வெண்ணெய் நல்லூர் ஒன்றிய வி.வி.மு. அமைப்பாளர் தோழர் நாராயணன் வி.வி.மு.வின் கொள்கைகள் - நோக்கங் களை விளக்கியும், கல்லை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் இன் றைய பொறுக்கி அரசியலை அம்பலப்ப டுத்தி, புரட்சிப் பாதையில் உழைக்கும் மக் கள் திரள வேண்டியதன் அவசியத்தை விளக்கியும் சிறப்புரையாற்றினர். அதைத் தொடர்ந்து புரட்சிகர இசை நிகழ்ச்சி நடை பெற்றது. ஏறத்தாழ 500 பேருக்கு மேல் பங் கேற்ற இப்பொதுக்கூட்டம் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏறபடுத்தியுள்ளது.

தகவல்:

விவசாயிகள் விடுதலை முன்னணி
துரிஞ்சாபுரம் ஒன்றியம்

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

13-14

16 - 31 மே '89
1 - 15 ஜூன் '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# சீன மாணவர் கோருவது பூரண முதலாளித்துவம்தான்!

தியன்ஆன்மென் சதுக்கம் - சொர்க்க அமைதி நிலவும் மைதானம். அங்கேதான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நவ சீனப்புரட்சியின் வெற்றியை, மக்கள் சீனக் குடியரசைப் பிரகடனப்படுத்தி ஐந்து பொன்னிற நட்சத்திரங்கள் பொறித்த செங்கொடியை ஏற்றிவைத்தார். புரட்சியின் நாயகன் மாசேதுங். அதே தியன்ஆன்மென் சதுக்கத்தில்தான் இப்போது எதிர்ப்பு புரட்சி முழக்கமிட்டு முதலாளித்துவத்தைப் பூரணமாக நிறுவும்படி போராடி வருகிறார்கள், பிற்போக்கு நோய் பிடித்த சீன மாணவர்கள்.

''ஜனநாயக ஆட்சிமுறை'', ''கம்யூனிஸ்டுக் கட்சியிலுள்ள ஊழல் பேர்வழிகள் மீதான விசாரணை நடவடிக்கை'' என்ற இரு கோரிக்கைகளையும் முன் வைத்து நடக்கிறது சீன மாணவர் போராட்டம். இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, 'ஒடுக்கு'வதற்கு இராணுவத்தை ஏவிய போதும் மாணவர் உறுதி குலையவில்லை. சாலைகளிலே தடுப்புச் சுவர்களை எழுப்பி இராணுவத்தைச் சூழ்ந்து கொண்டார்கள் நகர மக்கள். முன்னேற முடியாமற்போன இராணுவம் திரும்பிப் போனது. ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், தொழிலாளர்கள், முதியோர்கள் என சமூகத்தின் மற்ற பிரிவானது ஆதரவு பெருகுகிறது; நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் போராட்டம் பரவுகிறது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியும், இராணுவம் உட்பட அரசுமே குறுக்காகவும் நெடுக்காகவும் பிளவுபட்டுப் போயுள்ளது. பழைமைவாதிகளுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே பதவி அதிகாரச்சண்டை தீவிரமாக நடக்கிறது - இவை கடந்த ஒரு மாதமாக சீனாவிலிருந்து வரும் செய்திகள்.

'ஜனநாயகம்', 'ஊழல் ஒழிப்பு' ஆகிய இரு மாணவர் கோரிக்கைகளை மட்டும் வைத்து மேலோட்டமாகப் பார்க்கும்போது அவர்களுடைய போராட்டம் நியாயமாகவே தோன்றும். ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிமையானது அல்ல. மாவோவின் மறைவிற்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிக் கொண்ட டெங்சியாவோ பிங் கும்பல் நவீனப்படுத்துவது, சீர்திருத்துவது என்கிற பெயரில் பல்வேறு சீரழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. சோசலிசப் பொருளாதாரக் கட்டுமானத்தைத் தகர்த்து தனியுடமை - சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நிறுவியது. புதிய முதலாளித்துவ வர்க்கத்தையும், பன்னாட்டு ஏகாதிபத்திய - ஏகபோக முதலாளித்துவத்தையும் ஊட்டி வளர்க்கிறது. இரவு கேளிக்கை விடுதிகள், விபச்சாரம், பெண்ணடிமைத்தனம், பாலுறவு நோய்கள், ஆபாச அந்நியக் கலாச்சாரம் ஆகிய பல சீரழிவுகளும் பரவுகின்றன. எங்கும் லஞ்ச ஊழல், கிரிமினல் குற்றங்கள் பெருகுகின்றன.

இந்தச் சீரழிவுகளுக்குக் காரணமான ஊற்றுமூலங்களுக்கு எதிராக சீன மாணவர்கள் போராடவில்லை. லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரித்துத் தண்டிக்க வேண்டும் என்று கோருகிறார்கள். லஞ்ச ஊழல்களுக்கும் காரணம் 'கம்யூனிஸ்டு' கட்சியின் ஒரு கட்சி ஆட்சிமுறை தான் அடிப்படை என்று கருதுகிறார்கள்; பல கட்சி ஜனநாயக ஆட்சிமுறை அதற்கான தீர்வாக அமையுமெனக் கருதுகிறார்கள்.

சீன மாணவர்களுடைய கோரிக்கை மேற்கண்ட சீரழிவுகள் அனைத்தையும் ஒழித்துக்கட்டிய மக்கள் ஜனநாயகம் அல்ல. மேற்கண்ட சீரழிவுகள் அனைத்துக்கும் வழிவகுக்கும் முதலாளித்துவ நாடாளுமன்ற போலி ஜனநாயகம் தான்! எனவேதான் மக்கள் ஜனநாயகப் புரட்சியிலே துரத்தியடிக்கப்பட்ட சியாங்கேஷேக்கின் வாரிசுகளும், இந்தியாவிலே தஞ்சம்புகுந்த தலாய்லாமாவும் உட்பட உலகப் பிற்போக்குவாதிகள் அனைவரும் சீன மாணவர் போராட்டத்தை வரவேற்று வானுயரப் புகழ்கிறார்கள். ஜப்பானின் 'லாகீட்' விமான பேர ஊழல், 'ரெக்ரூட்' கம்பெனி பங்குச் சந்தை ஊழல் முதல் அமெரிக்காவின் ஈரான் - கான்ட்ரா ஊழல் வரை முதலாளித்துவ ஜனநாயகம் லஞ்ச ஊழலை வளர்ப்பதையே காண்கிறோம். இந்தியா, இலங்கை இன்னும் பல நாடுகளின் பல கட்சி ஜனநாயகம் உண்மையில் பாசிசக் கொடுங்கோன்மை நிலவச் செய்வதைக் காண்கிறோம்.

மாணவர்களுடைய போராட்டம் ''மாபெரும் கொந்தளிப்பு'', ''கலகம்'', ''குழப்பம்'', ''சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பது'' என்று கூறி ஒடுக்க முயலும் பழைமைவாதிகள் எனப்படுவோரும் மாவோ நிறுவிய மக்கள் ஜனநாயக, சோசலிச அமைப்புகளைக் காப்பதற்காக நிற்கும் கம்யூனிஸ்டுகள் அல்ல. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது, சோசலிசத்தை நிர்மாணிப்பது என்ற கலாச்சார புரட்சி உட்பட மாசேதுங் சிந்தனைகளை உதறிவிட்டு அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவிய போலிக் கம்யூனிஸ்டுகள். சமூக, பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் முதலாளித்துவச் சீரழிவுகளை கொண்டு வருவதை ஆதரிக்கும் அதே சமயம் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கீழ் சர்வாதிகார அரசியல் ஆட்சி முறையைத் தக்கவைத்துக் கொள்வதன் மூலம் ஆதாயம் அடைய விரும்புபவர்கள். ருஷ்யாவில் குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலும், சீனாவில் லிபெங் - டெங்சியாவோ பெங்கும் இத்தகைய போலிக் கம்யூனிஸ்டுகள்.

பாட்டாளிவர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம், மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தான் உலகிலேயே உண்மையான ஜனநாயக அமைப்பு முறைகளாகும். ஆனால் சோசலிச ஜனநாயகம் மற்றும் சோசலிச கட்டமைப்பு முறையின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்கிற பெயரில் முதலாளித்துவ ஜனநாயகத்தை நிறுவிக் கொள்வதை இன்னொரு பிரிவு போலிக் கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்கள். இவர்களைத் தான் புரட்சியாளர்கள், சீர்திருத்தவாதிகள் என்று உலகப் பிற்போக்காளர்கள் ஏற்றிப் போற்றுகின்றனர். ருஷ்யாவில் கோர்ப்பச்சேவும், சீனாவில் ஜியாவோ ஜியாங்கும் இத்தகைய போலிக் கம்யூனிஸ்டுகள் தான்!

ஆகவே, இப்போது சீர்திருத்தவாதிகள், பழைமைவாதிகள் என்கிற பெயரில் அவர்களுக்குள் நடக்கும் போராட்டம் மீண்டும் எந்த முறையில் முதலாளித்துவத்தை அமைப்பது என்பது தானே தவிர ஜனநாயகத்தையோ, சோசலிசத்தையோ நிறுவிக் காப்பதற்கானது அல்ல.

படிப்பகம்

www.padippakam.com



# ராஜீவின் புதிய ஆட்சிக் கொள்கை:

# மத்தியிலே பாசிசம்! உள்ளூரிலே பஞ்சாயத்துகள்!

"பஞ்சாயத்து ராஜ்ஜியம் ஒரு பெரிய நெருக்கடியில் சிக்கியிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் எதனால் இந்த நெருக்கடி? இந்த நெருக்கடி நமது தவறுகள், குறைபாடுகளின் விளைவா? அல்லது நாம் அறியாத, நம்மால் கட்டுப்படுத்த முடியாத சம்பவங்களின் விளைவா? அல்லது இவ்விரண்டினதும் விளைவா? பஞ்சாயத்து ராஜ்ஜியத்தை ஓர் ஆழமான நெருக்கடி சூழ்ந்துள்ளது என்று கருதுகிறேன்.

"மகாராஷ்டிராவிலும் குஜராத்திலும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் வெற்றிகரமாக உள்ளன; என்றால் மற்ற மாநிலங்களில் அவை வெற்றிகரமாக இல்லையே ஏன்? இது நாம் பதில் சொல்லவேண்டிய பிரச்சினை என்றே நான் கருதுகிறேன். பஞ்சாயத்து அமைப்புகள் நேர்த்தியும், அனுபவமும், முதிர்ச்சியும் அடையவில்லை; எனவே அவற்றுக்கு அதிகாரம் தரக்கூடாது என்று சிறுமதி படைத்தவர்கள் தான் கூறமுடியும். பஞ்சாயத்து அமைப்புகள் முன்னேறாத வரை அவைகளுக்கு அதிகாரம் -பொறுப்புக்களை மாற்றிக் கொடுக்கக்கூடாது என்று சிலர் கூறலாம். ஆனால், அதிகாரம் கொடுக்காமல் அவை எப்படி வளர முடியும்? கௌரவர்களின் சபையில் சிக்கிக் கொண்ட திரௌபதியோடு தான் பஞ்சாயத்து அமைப்புகளை ஒப்பிட வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு நாம் போதிய அதிகாரம் அளிக்கவில்லை. அதற்குப்பதிலாக பல மாநிலங்களில் அவற்றின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன .

பஞ்சாயத்து ஆட்சிமுறை இன்னமும் பரிசோதனைக்குரியதாகவே கருதப்படுகிறது. பல சந்தேகப் பேர்வழிகள் அதை ஒழித்துக் கட்டவே விரும்புகிறார்கள். ஆனால் அவர்களால் அதை ஒழித்துக் கட்ட முடியாது. அதை ஒழிக்க முடியாது என்பதால் அதைப் பலவீனமாக்கிவிட அவர்கள் முயலுகிறார்கள். சில மாநிலங்கள் அதை வெறும் அடையாளச் சின்னமாகத்தான் வைத்திருக்க விரும்புகின்றன.

"மாநிலங்களின் முதல்வர்கள் மத்தியிலிருந்து இன்னும் கூடுதலான அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்ள முயலுகிறார்கள். அவர்களுடைய நிர்ப்பந்தம் காரணமாக மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏற்கனவே பல நிதி அதிகாரங்களை மாநில அரசாங்கங்கள் பெற்றுள்ளன. ஆனால் இந்த அதிகாரத்தின் ஒரு பகுதியையாவது மாவட்ட ஒன்றியம், பஞ்சாயத்து சமிதி, பஞ்சாயத்து ஆகியவற்றுக்கு அந்த மாநில அரசாங்கங்கள் ஏன் மாற்றித் தரவில்லை என்று நான் கேட்கிறேன். இதைச் செய்வதற்கு அவர்கள் தயாராய் இல்லை. எனவே பஞ்சாயத்து ஆட்சி இயக்கத்தின் வளர்ச்சிகுள்ள தடைகளில் ஒன்று, மாநில அரசாங்கங்கள்தான்"

— இவையெல்லாம் யாருடைய பிரசங்கம்? பஞ்சாயத்துச் சட்டம் குறித்து வரிந்துகட்டிக் கொண்டு பாசிச ராஜீவ் வாய்கிழியத் தினமும் செய்யும் பிரசங்கம் என்று நீங்கள் எண்ணினால் ஏமாந்து போவீர்கள். பஞ்சாயத்துச் சட்டத்துக்கு எதிராக மார்தட்டும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் குருபாதசாமி ஆற்றிய பேருரை. இப்போதல்ல, இருபது ஆண்டுகளுக்கு முன்பு! அப்போது அவர் காங்கிரசு அரசாங்கத்திலே உணவு, விவசாயம், சமூக வளர்ச்சி மற்றும் கூட்டுறவுத் துறை துணை மந்திரி.

★ ☆ ★

"பஞ்சாயத்து அமைப்புகள்தான்; அவை மட்டும் தான் கிராமப்புறங்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளில் ஒரு உண்மையான, துரிதமான, செயலூக்கமுடைய புரட்சியைக் கொண்டுவர முடியும் என்பதில் சந்தேகமே கிடையாது. கிராமப்புறங்களில் உள்ள அளவற்ற சக்தியையும் ஆர்வத்தையும் ஒன்றுதிரட்டி சரியான திசை வழியில் நெறிப்படுத்துவதன் மூலம் கிராமியச் சமுதாயத்தைப் புரட்சிமயமாக்கும் நிறுவனங்களாக பஞ்சாயத்து அமைப்புகள் மட்டுமே இருக்கமுடியும் என்று நான் முழு நம்பிக்கையோடு இருக்கிறேன். தற்போது, இந்த நிறுவனங்களின் வளர்ச்சிவேகம் வருந்துதற்குரிய முறையில் மந்தமாக உள்ளது; அவற்றின் சாதனைகள் மிகமிகக் குறைவாய் உள்ளன. எனவே அதன் செயலூக்கம் குறித்துக் கடும் விமர்சனம் உள்ளது.

"இந்த நிறுவனங்களுக்குப் பொருளாதார அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதால் கிராமமக்கள், பஞ்சாயத்து அமைப்புகளின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள், தங்



படிப்பகம்

www.padippakam.com

கள் பிரதிநிதிகள் மூலமாக அவற்றின் செயல்பாடுகளை கவனிக்கவும் விமர்சிக்கவும் உரிமையிருப்பதை உணர்கிறார்கள். பஞ்சாயத்து ராஜ்ஜியம் மக்களுடைய பங்கேற்பு ஜனநாயகம்; அதில்தான் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் ஒரு காரியசித்தமான கருத்துக் கூறும் உரிமை வயதுவந்த ஒவ்வொருவரும் பெறுகிறார்கள். எனவே அவர்கள் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு தொடர்ந்து கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகின்றனர். அதானல்தான், அளவற்ற பொறுப்புகளுக்குத் தோள் கொடுத்து, இந்திய கிராமிய சமூகத்தைப் புரட்சிமயமாக்குவதில் வெற்றிபெறச் செய்யும் வகையிலே எல்லா அம்சங்களிலும் இந்த நிறுவனங்களுக்கு ஒழுங்காக வழிகாட்டி ஆலோசனை கூறி உதவுவது நமது பொறுப்பாக உள்ளது''.

— இவையெல்லாம் யாருடைய வாய் வீச்சு? சிதம்பரம் போன்ற ராஜீவின் எடுபிடி மந்திரிகளில் ஒருவருடையது என்று நீங்கள் எண்ணினால் ஏமாந்து போவீர்கள். ஆந்திராவின் பஞ்சாயத்து மந்திரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு பதவி வகித்த தோட்டா ராமசாமியின் பேருரை! இன்று பேசியதைப் போலுள்ளது அல்லவா?

☆ ☆ ☆

''ஜனநாயகத்தைப் போலவே பஞ்சாயத்து ராஜ்ஜியம் நம்முடைய ஒரு வாழ்க்கை முறை. அதைத் திணிக்க முடியாது; நம்முடைய உள்ளூர் மண்ணிலேயே வேர்விட்டு வளர வேண்டியது. கிராமங்களுடைய சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பை மறு ஒழுங்கமைப்பு செய்து வாழ்க்கையிலே ஒரு புதிய லட்சியத்தை நிறுவிடும் வகையிலே பஞ்சாயத்துக்களுக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும்.விழிப்புறும் விவசாயிகளின் பிரயாசைகளை தகுந்த நிறுவன மரபுகளாக மாற்றியமைக்கும் நமது திறமையைப் பொறுத்துத்தான் மகாத்மா காந்தி கனவு கண்டதைப் போன்ற இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலம் அமையும்''

— இவை இந்திய ஜனாதிபதியின் பேருரை. ஆனால் இப்போதுள்ள ராஜீவ் காந்தியின் விசுவாசி வெங்கிடராமனுடையது அல்ல. இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த இந்திராவின் விசுவாச ஜனாதிபதி வி.வி.கிரி ஆற்றிய பேருரை!

இவை மட்டுமா,

☆ பஞ்சாயத்து ராஜ்ஜியம் கிராமப்புறங்களிலே ஏற்படப்போகும் பெரும் புரட்சி.

☆ பஞ்சாயத்து ராஜ்ஜியம் கிராமப்புற நாட்டாண்மை, நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு எதிராக ஏழை எளிய விவசாயிகளின் அரசியல் ஆயுதம்.

☆ ''மக்களுக்கே அதிகாரம்'', ''வளர்ச்சிப் பணிகளிலே மக்கள் பங்கேற்பு'', ''ஜனநாயகத்தை அடிப்படை மக்களுக்கு வாரி வழங்குவது''

— இப்படி வானொலி, வானொளியிலே காது செவிடுபட நீங்கள் கேட்கும் வசனங்கள் எதுவுமே புதிதல்ல. எல்லாம் புழுத்துப்போன பழைய சரக்குத்தான்!

ஒரு காலத்தில் வெற்றிகரமாக ஓடி வசூலைக் குவித்த சினிமாப் படங்களை ''புத்தம் புதுக்காப்பி'' என்று விளம்பரம் செய்து மீண்டும் வியாபாரம் செய்வதுண்டு. அல்லது பழைய கதையையே இப்போதைய பிரபலங்களை வைத்து மறுபடியும் சினிமா எடுத்து வெளியிடுவதும் உண்டு. இல்லையானால் வேறு மொழிகளிலே வெற்றிகரமாக ஓடியவற்றை டப்பிங் -மொழிமாற்றம் செய்தோ, உள்ளூர் பிரபலங்களை வைத்துப் படமெடுத்தோ வெளியிடுவது உண்டு. அதுபோலத்தான் ராஜீவ் பெருமையுடன் வழங்கும் ''பஞ்சாயத்து ராஜ்ஜிய''-மும்

## பஞ்சாயத்து ஆட்சிமுறை: காந்திய புளுகு மூட்டை

பஞ்சாயத்து ராஜ்ஜியம், கிராம ராஜ்ஜியம், ராம ராஜ்ஜியம் என்பது காந்தி கண்ட கனவு, நேரு அதற்கு வடிவம் கொடுத்தார், ராஜீவ் அதற்கு உயிர் ஊட்டுகிறார் என்பதெல்லாம் அண்டப்புளுகு - ஆகாசப் புளுகு. பழங்காலந் தொட்டு பல்வேறு வடிவங்களிலும் பஞ்சாயத்து அமைப்புகள் - உள்ளூராட்சிகள் இருந்து வந்துள்ளன. இந்த நாட்டில் மட்டுமல்ல. புராதான கிரேக்கம் ரோமாபுரியிலும் நவீன பிரெஞ்சு, இங்கிலாந்து, அமெரிக்காவிலும் கூட பஞ்சாயத்துக்கள், உள்ளூராட்சி அமைப்புகள் உண்டு. அரசு என்றொரு அமைப்புத் தோன்றியதில் இருந்து உள்ளூர் நிர்வாகத்துக்கென ஏதாவது ஒரு ஆட்சிமுறை இருந்துதானே ஆக வேண்டும்!

நம்ம ஊர் தமிழ்ப் புலவர்களைக் கேளுங்கள். சங்க காலத்திலே தமிழகம் மூன்று மண்டலங்களாகவும் ஒவ்வொன்றும் பல நாடுகள் அல்லது கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் கீழே ஊர் மன்றங்கள் அல்லது அவைகள் இருந்தன. மன்றம், பொடியில், அம்பலம் அல்லது வேடிகை என்ற இடங்களில் அவை கூடும். அவற்றுக்குக் கீழே ஏரிவாரியம், தோட்ட வாரியம், பஞ்ச வாரியம், களனி மற்றும் கலிங்கு வாரியங்கள், குடும்ப வாரியம், உதாசின (அந்நியர்) வாரியம், தடிவேலி (வழித்தட) வாரியம் என்று பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றுக்கான நிர்வாகிகள் குடவோலை முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிற்காலத் தமிழகத்திலே பாளையம், குறிச்சி என்கிற உள்ளூராட்சி அமைப்புகளும், நியமன நிர்வாகிகளும் இருந்தனர்.

நம்ம ஊர் வரலாற்று ஆசிரியர்களைக் கேளுங்கள். முகலாயர் ஆட்சியிலும், அதன் பிறகு வந்த காலனிய ஆதிக்கத்திலும் உள்ளூராட்சி நிர்வாகம் எப்படியிருந்தது என்று சொல்வார்கள். மத்திய அரசுக்குக் கீழே நவாப்புகள், ஜமீன் - ஜாகிர் -தாலுக்காரர்கள் மிட்டாமிராசுகள் பட்டேல் பட்டு வாரிகளையும் நியமித்து ஆட்சி நடத்தினர். ஒரு நூறாண்டு காலம் காலனிய ஆதிக்கமும் அந்த முறையிலேயே நீடித்தது. பிறகு விடுதலைப் போராட்டங்கள் வலுத்தபோது, இந்தியர்களுக்கு ஆட்சிமுறையில் பயிற்சியளிப்பது, பங்கேற்பது என்ற பெயர்களில் உள்ளூராட்சி அமைப்புகளைக் கொண்டு வந்தார்கள். நகராட்சி மற்றும் [illegible] வாரியங்கள் வந்தன. அவற்றைக் கைப்பற்றுவதற்காக நீதிக் கட்சியினரும் காங்கிரசாரும் நடத்திய நாய்ச் சண்டையைத் தான் இனப் போராட்டமாகவும், விடுதலைப் போராட்டமாகவும் திரித்துச் சொல்லுகிறார்கள். கல்வி மற்றும் சொத்து அடிப்படையில் வாக்குரிமையும், இட ஒதுக்கீடும் கூட அவற்றிலே இருந்தன. வணிகர்களும் நிலப்பிரபுக்களும் ஆங்கிலேய ஆட்சியாளருடைய ''கருணை'' பெறுவதற்கான ஆயுதமாக அந்த உள்ளூராட்சி அமைப்புகளைப் பயன்படுத்தினர்.

படிப்பகம்

வெளிநாட்டு விவகாரங்களைக் கொஞ்சம் எட்டிப் பாருங்கள். பண்டைய ரோமாபுரி, கிரேக்கத்திலே நாடு பல குடியரசுகளாகப் பிரிக்கப்பட்டு தேர்வு முறையிலே பிரபுக்களின் ஆட்சி நடந்தது. நெப்போலியன் காலத்திலே பிரான்சு தேசம் பல இலாக்கா (டிபார்ட்மெண்டிஸ்) களாகவும், கம்யூன்களாகவும் பிரிக்கப்பட்டு உள்ளூராட்சி நடந்தது. இப்போதும் இலாக்காக்கள், பிராந்தியங்கள், கம்யூன்கள் ஆகிய மூன்று மட்டப் பிரிவுகள் உள்ளன. 37708 கம்யூன்கள் உள்ளன. அவற்றுக்கு அனைத்து மக்கள் வாக்குரிமை பெற்று ஐந்து லட்சம் மேயர்களையும், கவுன்சிலர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இங்கிலாந்திலே கவுண்டிகள், நகரக் கவுண்டிகள் என்றும் அவற்றுக்குக் கீழே மாவட்டங்கள் நகர மாவட்டங்கள் என்றும் அவற்றுக்கும் கீழே பாரிஷ் - பங்குகள் என்றும் மூன்று மட்டங்களிலான உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. அமெரிக்காவிலே கவுண்டிகள், நகரவைகள், பள்ளி மாவட்டங்கள், நகரியங்கள், சிறப்பு மாவட்டங்கள் என்று அடுக்கடுக்கான உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. இவற்றுக்கான மக்கள் பிரதிநிதிக் குழுக்கள் அல்லது நிர்வாகிகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். கல்வி, சாலை வசதிகள், குடிநீர் - சுகாதாரம் மட்டுமல்ல நீதி, சட்டம் ஒழுங்கு போன்ற அதிகாரங்களும்கூட அங்கு உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உண்டு. அமெரிக்க மக்கள் ஐந்து அடுக்கடுக்கான ஆட்சி அமைப்புகளுக்கு ஒரே சமயம் வரி கட்டுகிறார்கள்.

ஆக, கடந்த கால வரலாற்றிலும் சரி, நிகழ்கால ஆட்சி அமைப்புகளிலும் சரி, இப்படி உலகின் எல்லா நாடுகளிலும் ஏதாவது ஒரு வடிவிலான, ஏதாவது ஒரு பெயரிலான உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. ஆனால் இந்தியாவுக்கு மட்டும் ஏதோ தனிச் சிறப்பான காந்திய கண்டுபிடிப்பாக பஞ்சாயத்துக்கள் பற்றி காங்கிரசுக்காரர்கள் பீற்றிக் கொள்கிறார்கள். இப்போது பஞ்சாயத்துக்களை உயிர்ப்பிப்பதால் கிராமப்புற ஏழைகளின் அவலங்கள் அனைத்துக்கும் தீர்வு கண்டு எங்கும் சுபீட்சம் தாண்டவமாடும் என்று நம்பச் சொல்லுகிறார்கள். ஆனால் நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ளூராட்சி அமைப்புகள் செயல்பட்டதன் அனுபவங்கள் என்ன? நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் சுரண்டல் - ஒடுக்குமுறை சர்வாதிகாரத்துக்கு நாடாளுமன்ற -சட்டமன்ற ஜனநாயக ஆட்சி அமைப்புகள் எப்படி வசதியானவையாக இருக்கின்றனவோ அதன் ஒரு அங்கமாகத்தான் உள்ளூராட்சி அமைப்புகள் இயங்க முடியும். அவர்களுடைய ஆட்சி - நிர்வாகம் அடிமட்டம் வரை செய

www.padippakam.com

லூக்கத்தோடு செல்லுபடியாவதற்கான உபாயம்தான் உள்ளூராட்சி அமைப்பு முறை.

**பஞ்சாயத்து ஆட்சிமுறை: இருபது ஆண்டுகளுக்கு முன்பே தடம்புரண்டு நிலைகுலைந்து போனது**

''பஞ்சாயத்துக்கள் சட்டத்தை திடீரென் றும், அவசர கோலத்திலும் கொண்டு வருகி றது, ராஜீவ் அரசு'' என்பது எதிர்க்கட்சிக ளின் குற்றச்சாட்டுகளில் ஒன்று. ''இல்லை, இல்லை, 1973 அசோக் மேத்தா கமிட்டி அறிக்கை வந்ததில் இருந்தே நாடு தழுவிய பல விவாதங்கள் நடத்தி, ஆழமாக ஆய்ந்து தான் கொண்டு வந்திருக்கிறோம்'' என்பது ஆளும்கட்சியின் பதில். இரு தரப்பினருமே பஞ்சாயத்துக்களின் பூர்வீகத்தைத் தெரிந்தே மூடிமறைக்கிறார்கள். அவற்றிலே அவ்வ ளவு அழுக்கு மண்டிக்கிடக்கிறது!

காந்தி - நேரு - இந்திரா என்று பஞ்சா யத்து ராஜ்ஜியத்துக்கு ஒரு பரம்பரைக் கதை யுண்டு. ''நீ விரும்பினால் ஒரு சோசலிச அர சாங்கத்தையே அமைத்துவிடு'' என்று காந்தி தனது அரசியல்வாரிசு நேருவிடம் சொன்னாராம். 1952 மே 13ந் தேதி வளர்ச் சிக்கான கமிஷனர்கள் மாநாடு கூட்டிப் பேசிய நேரு ''கட்டிடங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது, பாசனக் கிணறுகள் தோண்டுவது ஆகியவற்றில் எனக்கு ஆர் வம் இல்லை. மக்களிடம் நெருங்கிப் போய் அவர்களும் வளர்ச்சிப் பணியிலே ஈடுபடு வது தான்முக்கியம்'' என்றாராம். அதன்படி நாட்டை 5447 வட்டாரங்களாகப் பிரித்து வளர்ச்சி அதிகாரிகள், துணை அதிகாரிகள், கிராம சேவகர்கள் என்று நியமித்து எல்லா அம்சங்களிலும் முன்னேற்றப் பணித்தன ராம். அது போதாதென்று 'ஜனநாயக ரீதி யில் அதிகாரத்தைப் பரவலாக்குவது' என்ற நோக்கத்துக்காக 1957 ஆம் ஆண்டு பல்வந் ராய் மேத்தா ஆய்வுக்குழு அமைக்கப்பட் டது.

''(அ) கிராம மட்டத்திலிருந்து மாவட் டம் வரை ஒரே உருவாகப் பிணைந்த ஒரு மூன்று மட்ட உள்ளூர் சுய ஆட்சி அமைப்பு கள் இருக்க வேண்டும் (ஆ) அவற்றுக்கு அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை மெய் யாகவே மாற்றித் தரவேண்டும். (இ) அவை தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் போதிய மூலாதாரங்களை மாற் றித்தர வேண்டும் (ஈ) எல்லா வளர்ச்சித் திட் டங்கள் - திட்ட வரையறைகளை இந்த அமைப்புகள் மூலமாக நெறிப்படுத்தி அமு லாக்க வேண்டும் (உ) மேலும் கூடுதலான அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கவும் பொறுப் புக்களை ஒதுக்கவும் உகந்த முறையிலே இந்த அமைப்புகள் பரிணமிக்க வேண்டும்'' - இவைதான் பல்வந்த்ராய் மேத்தா கமிட்டி அறிக்கையின் சிபாரிசுகள்.

மேற்கண்ட அறிக்கையை ஏற்று நாடு முழுவதும் பஞ்சாயத்து அமைப்புகள் நிறு வப்பட்டன. மாநில அரசாங்கங்களின் பொறுப்பிலே அவை இயங்கின. பெயர்க ளும், அமைப்பு முறைகளும் கொஞ்சம் மாறுபட்டிருந்தன. 1964 ஆம் ஆண்டு ஜன வரி மற்றும் டிசம்பரில் ராஜஸ்தான் தலைநக ரில் அகில இந்திய பஞ்சாயத்து அமைப்புக ளின் பிரச்சினைகள் மீது இரண்டு கருத்தரங் குகள் - மாநாடுகள் நடந்தன. பிரபலமான நிர்வாக-பொருளாதார நிபுணர்கள், சமூக வியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் கலந்து கொண்டனர். இதற்கிடையே அனைத்து 'மாநில பஞ்சாயத்துக்களின் செயல்பாடுகளைப் பரிசீலித்து ஆய்ந்தறிவ தற்கான குழுக்கள் பல அமைக்கப்பட்டு அறிக்கைகள் குவிந்தன. அதன்பிறகு 1969 ஆம் ஆண்டு ஐதராபாத்தில் மிகப் பெரிய அளவில் -நூற்றுக்கும்-மேற்பட்ட ''பேரறி ஞர்கள்'' பங்கேற்ற கருத்தரங்கு - மாநாடு கூட்டி பஞ்சாயத்துக்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தார்கள்.

'மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய இருமாநிலங்களில் மட்டுமே பஞ்சாயத்து ஆட்சி முறை வெற்றிகரமாக உள்ளது. மற்ற அனைத்து மாநிலங்களிலும் எந்த நோக்கத் துக்காகக் கொண்டு வந்தோமோ அதிலி ருந்து தடம் புரண்டு, நிலை குலைந்து, தேக்க நிலைக்கு வந்துவிட்டது' என்ற கருத்தை அதிகார வர்க்கத்துக்கேயுரிய பாணியில் ஒப் புக் கொண்டார்கள். மகாராஷ்டிராவிலும் குஜராத்திலும் கூட பஞ்சாயத்துக்களின் வெற்றிகரமான நடைமுறை என்று அவர்கள் குறிப்பிடுவது கூட எதைத் தெரியுமா? அங் குள்ள நிலப்பிரபுக்களும் விவசாயிகளும் பஞ்சாயத்துக்கள் மற்றும் கூட்டுறவுகளில் புகுந்து கொண்டு அதிகாரத்தையும் வளர்ச் சிப் பணிகளையும் கைப்பற்றிக் கொண்ட னர். குறிப்பாக சர்க்கரைக் கூட்டுறவு ஆலை களின் ஆதிக்கத்தைக் கொண்டு மாநில அரசி யலில் ஆதிக்கம் வகிக்கின்றனர். தமது பண்ணை விவசாயத்தை நவீனப் படுத்திக் கொண்டனர்.

பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்ட பத் தாண்டுகளில் தடம்புரண்டு நிலை குலைந்து தேக்க நிலையை அடைந்ததற்கான காரணங் களாக பின்வருவனவற்றைக் கூறினர்:

★ பஞ்சாயத்துக்களுக்குப் போதிய அதி காரம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. மாநில அரசுகளின் ஆதிக்கத்தின் கீழே தான் பல வளர்ச்சிப் பணிகள் இருந்தன.

★ பஞ்சாயத்துக்களின் மக்கள் பிரதிநிதி களை விட அதிகாரிகளுக்கே கூடுதலான கட்டுப்பாடுகள், உரிமைகள் இருந்தன. அவர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்க ளாக நடந்து கொள்ளவில்லை. அதற்கான அவசியமும் இருக்கவில்லை.

★ பஞ்சாயத்துக்களின் நிதி ஆதாரங்கள் மிகமிகக் குறைவாகவே இருந்தன. பல பஞ் சாயத்துக்களின் ஊழியர்களுக்கு ஊதியம ளிப்பதற்குக் கூட நிதி கிடையாது.

★ பழைய நிலப்பிரபுக்கள் மற்றும் சாதி ஆதிக்க சக்திகள் பஞ்சாயத்துக்களைக் கைப் பற்றிக் கொண்டு சாதாரண மக்களுக்கு எதி ராக மேலும் ஆதிக்கம் செலுத்தினர்.

★ தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகிய பலவீனமான பிரி வினர் தேர்ந்தெடுக்கப் படவில்லை. இட ஒதுக்கீட்டிற்குப் பதிலாக சிலரை நியமித்துக் கொள்ளும் முறையே இருந்தது. அவர்க ளும் வெறும் பார்வையாளர்களாகவே ஒடுங்கியிருந்தனர்.

★ பஞ்சாயத்துக்களில் அரசியல் கட்சிக ளின் தலையீடு காரணமாக கிராம சமூகத்தில் பிளவு ஏற்பட்டு வளர்ச்சிப் பணிகள் பாதிக் கப்படுகின்றன. பஞ்சாயத்துக்களில் அரசி யல் பிழைப்புவாதிகளின் ஆதிக்கம் அதிக ரித்து வருகிறது.

பஞ்சாயத்துத் தேர்தல்களில் மோசடிகள், தில்லு முல்லுகள் பெருத்துவிட் டன. குறிப்பாக ஒன்றியங்கள், மாவட்ட ஒன் றியங்களுக்கான தேர்தல்களில் பண ஆதிக் கம் முக்கியமாகிவிட்டது. சாதி, மத அடிப்ப டையிலான தேர்தல் பிரச்சாரங்களும் போட் டிகளும் நடக்கின்றன.

★ பஞ்சாயத்துக்களுக்குள்ள குறைவான நிதியும் கூட லஞ்ச ஊழலுக்கும், நிர்வாகக் கேடுகளுக்கும் விரையமாகின்றது. அதிகார முறை கேடுகளும் நடக்கின்றன. —மேற் கண்ட குறை பாடுகள் 1969 ஆம் ஆண்டி லேயே ஆட்சியாளர்களுக்கு எடுத்துரைக் கப்பட்டன. அதிகாரவர்க்க பாணியிலேயே அவற்றுக்குத் தீர்வுகளும் சொன்னார்கள். குறிப்பாக நக்சல் பாரிப் புரட்சி இயக்கம் வேகமாகப் பரவிக்கொண்டிருந்த சமயம்;



மகளிர் பஞ்சாயத்து மாநாடு: பாசிச கும்பலின் நாடக மேடை

படிப்பகம்

www.padippakam.com

கிராமப்புற விவசாயிகள் எழுச்சியுற்றிருந்தனர். எனவே நிலச்சீர் திருத்தம், பஞ்சாயத்துக்களை சீரமைப்பது பற்றி அதிகமாகவே இந்திரா அரசு சவடால் அடித்தது. ஆனால் நடைமுறையில் எதுவுமே நகரவில்லை. பஞ்சாயத்துக்களை சீரமைப்பதற்கான அசோக்மேத்தா கமிட்டி அமைக்கப்பட்டு 1973 இல் அறிக்கையும் வந்தது. ஆனால் அதுவும் அரசாங்கப் பரண்மீது தூக்கி எறியப்பட்டது.

''முழுப்புரட்சி'' என்ற இயக்கத்தைத் துவக்கிய ஜெயப்பிரகாசு நாராயணன் பஞ்சாயத்து ஆட்சி முறை தான் நாட்டின் சகல பிரச்சினைக்கும் தீர்வு என்றார். நடைமுறையிலோ பஞ்சாயத்து ஆட்சி முறைக்கு சமாதி கட்டப்பட்டு விட்டது. பல மாநிலங்களிலும் பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டு தேர்தல்களே நடத்தவில்லை. அவற்றின் பொறுப்புகள் தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆறு மாதத்துக்கு ஒரு முறை ஏதாவது காரணங்களைக் கூறி தேர்தல்களைத் தள்ளி வைத்தனர். கேரள சட்டசபையில் 22வது முறையாக பஞ்சாயத்துத் தேர்தல்களைத் தள்ளிவைக்கும்படி தீர்மானம் கொண்டு வர நேர்ந்தபோது கூச்சம் - வெட்கம் அடைந்த பஞ்சாயத்து மந்திரி விடுமுறையில் போய் விட்டார்.

தமிழ் நாட்டில் 15 ஆண்டுகள் பஞ்சாயத்துக் தேர்தல்கள் நடக்கவே இல்லை. அவற்றைக் கலைத்த கருணாநிதியும் பிறகு வந்த எம்.ஜி.ஆரும் தேர்தல்களைச் சந்திக்கத் துணியவில்லை. பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து மாநில ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டு, ஜனதா, மற்றும் தெலுங்கு தேச கட்சிகள் அவற்றை நடத்தின. அதன் பிறகு காங்கிரசு ஆளும் சில மாநிலங்களிலும் தேர்தல்கள் நடத்தினர்.

எப்போதோ சவக்குழியில புதைக்கப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறையை மீண்டும் தோண்டி எடுத்து வந்து குடமுழுக்குப் போட்டு பூசைக்கு வைக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல். ஏன்? மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

★ ஆட்சியை அச்சுறுத்தும் அளவுக்கு கூலி ஏழை விவசாயிகளின் புரட்சிகர பேரெழுச்சிகள் இல்லைதான். ஆனால் ஆந்திரா, பீகார் ஆகிய மாநிலங்களில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, மலைவாழ்மக்களிடையே புரட்சிகர இயக்கங்கள் சக்தி வாய்ந்தவையாக வளர்ந்துள்ளன. மற்ற சில மாநிலங்களில் நவீன விவசாயத்திலே ஈடுபட்டுள்ள நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளின் போராட்டங்கள் வலுத்துள்ளன.நடுத்தர விவசாயிகளின் ஆதரவை அவை பெற்றுள்ளன. பொருளாதார சலுகைகளுக்கான அந்தப் போராட்டங்களையும், பிராந்திய அதிகாரங்கள், சலுகைகளுக்காக சிறுபான்மை தேசிய இன மக்களின் போராட்டங்களையும் பஞ்சாயத்துச் சீர்திருத்தம் மூலம் 'சாந்தப்படுத்தி' விடமுடியும் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

★ சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் தமது முதலீடுகள், உதவிகள் நலன்களைப் பாதுகாப்பதற்காக அரசியல் உறுதிப்பாடுகளை ஏற்படுத்தும்படி நிர்ப்பந்திக்கின்றன. அதற்கான வழியாக பஞ்சாயத்துக்கள் மற்றும் தொண்டு - சமூக சேவை தன்னார்வக் குழுக்களை நிறுவி மக்களை ஈடுபடுத்தும்படி கோருகின்றன. அதன்மூலம் மக்களிடையே (போலியான) நம்பிக்கைகளை, பிரமைகளை உருவாக்கிவிட முடியும் என்று நம்புகிறார்கள்.

★ லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பலவற்றிலும் அம்பலமாகித் தனிமைப்பட்டுள்ள பாசிச ராஜீவ் கும்பல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான ஒரு உத்தி வகுத்துக் கொண்டு செயல்படுகிறது. இந்திரா வீட்டுவசதித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், பதினெட்டு வயதினருக்கும் வாக்குரிமை ஆகியவற்றோடு பஞ்சாயத்து ஆட்சி சீரமைப்பை ஓட்டுப் பொறுக்குவதற்கான கவர்ச்சியாக கையாளுகிறது. (பார்க்க: 1-16 நவம்பர் 1988,புதிய ஜனநாயகம்) பாசிச ராஜீவ் கும்பலின் தேர்



பஞ்சாயத்து மாநாட்டில் மகளிர் பிரதிநிதிகள் - ஓட்டுப் பொறுக்குவதற்கான உத்தி!

தல் வெற்றிக்கு மட்டுமல்ல; மக்களுக்கு எதிரான பாசிச சக்தியாக - தொண்டர் படையாக இருந்து பணியாற்றவும் தேவையான அரசியல் தரகர்களுக்கு அதிகாரப் பங்களிப்பதற்கும் பஞ்சாயத்துக்கள் அவசியம் என்று கருதுகிறார்கள்.

மேற்கண்ட காரணங்களுக்காகத் தான் பஞ்சாயத்துக்களுக்கு மீண்டும் உயிரூட்ட முயலுகிறார்கள். ஆனால் அடிமட்ட மக்களுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் ஒரு ஜனநாயகப் புரட்சியென்று இதைச் சித்தரிக்கிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுக் கட்சிகளும் இதே பிரமையைத்தான் உருவாக்குகிறார்கள். இவர்கள் எதிர்ப்பதெல்லாம் எந்த முறையிலே, எந்த வடிவத்திலே பஞ்சாயத்துச் சட்டத்தை ராஜீவ் அரசு கொண்டு வருகிறதோ அதைத் தான் எதிர்க்கிறார்கள். ஓட்டுக் கட்சிகளின் நோக்கங்கள் எதுவாக இருப்பினும், மக்களுக்குச் சேவை செய்யவும், முடிந்த அளவு மக்களுக்குச் சலுகைகள் - வசதிகளைப் பெற்றுத் தரவும் பஞ்சாயத்துக்களை ஏன் பயன்படுத்தக்கூடாது என்று அரசியல் சார்பற்றவர்களும் -விழிப்புறாதவர்களுமான சில ஜனநாயகவாதிகள் கேட்கிறார்கள்; பஞ்சாயத்து ஆட்சி முறையின் மீது நம்பிக்கையும் வைக்கிறார்கள். படித்த, சமூகப் பொறுப்புள்ள, இன்னமும் பிழைப்புவாதிகளாகச் சீரழியாத சிலர் சில கிராமப் பஞ்சாயத்துக்களில் தேர்ந்தெடுக்கப்படுவது இந்த நம்பிக்கையின் அடிப்படையாக உள்ளது. அவர்களிடம் கேளுங்கள்! இப்போது அதிகாரமோ, நிதி ஆதாரங்களே கிடையாது. அவற்றிலே கொஞ்சம் கிடைத்தாலும் அரசியல் பிழைப்புவாதிகளின் வேட்டைக்களமாக அந்தச் சில பஞ்சாயத்துக்களையும் மாற்றிவிடுவார்கள்.

★ 'ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் கமிசன் மூலமாக தேர்தல்கள் நடத்துவது. பஞ்சாயத்துக்களைக் கலைத்தால் சட்டமன்ற அங்கீகாரம்; ஆறு மாதங்களுக்குள் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.

★ பஞ்சாயத்துக்களின் வரவு செலவுகளை மத்தியத் தணிக்கை -கட்டுப்பாட்டு அதிகாரி தணிக்கை செய்யும் அதிகாரம்.

★ தாழ்த்தப்பட்டவர்கள், பெண்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு' - ஆகியவை தான் ராஜீவ் அரசு கொண்டு வந்துள்ள பஞ்சாயத்து சட்டத்தின் கருவாகும். மற்றபடி அதிகாரம் மற்றும் நிதி ஆதாரங்கள் பற்றிய சட்டங்களை அந்த மாநிலங்கள் தாம் நிறைவேற்றும்.

**மக்களுக்கு அதிகாரம்:**
**பஞ்சாயத்துகள் மூலம் வராது!**
**புரட்சியின் மூலம் பறிப்போம்!**

இந்த மாற்றங்களும் சரி, எதிர்க்கட்சிகள் கூறும் திருத்தங்களும் சரி -அவர்கள் பீற்றிக் கொள்வதைப் போன்ற புரட்சிகர மாற்றங்களைப் பஞ்சாயத்துக்கள் கொண்டு வந்து விடுமா? இல்லை. முடியாது என்பது தான் உண்மை! அதற்குத் தடையாக இரண்டு முக்கியக் காரணங்கள் உள்ளன.

www.padippakam.com

முதலாவதாக, மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ நிர்வாக அதிகாரம் கிடையாது. பெரும்பான்மையான மாநிலங்கள் மற்றும் ராஜீவின் பஞ்சாயத்துச் சட்டத்தின்படி கிராமப் பஞ்சாயத்துக்களுக்குத் தான் நேரடித் தேர்தல். தமிழ்நாடு போன்ற ஓரிரு மாநிலங்களில் மட்டுமே ஒன்றியத் தலைவருக்கு நேரடித் தேர்தல். மற்றபடி பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் ஒன்றிய உறுப்பினர்களாகி அதன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒன்றியத் தலைவர்கள், எம்.எல்.ஏ, எம்.பிக்கள் மாவட்ட ஒன்றிய உறுப்பினர்களாகி அதன் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த மறைமுகத் தேர்தல் முறையே ஓட்டுக்களை விலை பேசுவது, உறுப்பினர்களைக் கடத்தி ஐந்து நட்சத்திர சுகபோகத்தில் குளிப்பாட்டுவது ஆகிய தில்லு முல்லுகள் நிறைந்தது. எனவே அதிகபட்சம் பணவசதி உடையவர்களே ஒன்றிய, மாவட்ட ஒன்றியப் பதவிகளுக்கு வர முடியும். அவர்களுக்கும் மிக மிக வரம்புக்குட்பட்ட அதிகாரம்தான். அதிகாரிகளுடன் கூட்டுச்சேர்ந்து கொள்ளையிடும் வாய்ப்புகளே அதிகம்.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு, செயலாளர், சமூக சேவகர்கள், மற்றும் துப்புறவுப் பணியாளர்கள் போன்ற நான்காம் ஐந்தாம் மட்ட ஊழியர்கள் இருப்பார்கள். நிர்வாகப் பொறுப்பேற்கும் செயலாளர் உட்பட இவர்கள் அனைவரும் தமது மேலதிகாரியான கோட்ட வளர்ச்சி அதிகாரிக்குத் தான் கட்டுப்பட்டவர்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு கோட்ட வளர்ச்சி அதிகாரி, விரிவாக்க அதிகாரிகள், மற்றும் விவசாயம், சுகாதாரம், கூட்டுறவு, மின்சாரம், மராமத்துப் பொறியியலாளர்கள் போன்ற இலாக்கா சார்ந்த அதிகாரிகள், அவர்களுக்குக் கீழே அரசு ஊழியர்கள் இருப்பார்கள். இலாகா பூர்வ அதிகாரிகள் அந்தந்த மேலதிகாரிகளுக்கும், கோட்ட வளர்ச்சி அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கட்டுப்பட்டவர்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குத் தீர்மானங்களை முடிவு செய்யும் உரிமை மட்டும்தான் உண்டு. அவற்றை அமுலாக்குவது உட்பட ஒன்றியத்தின் சார்பாக சகல நிர்வாக அதிகாரமும் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளிடம் சிக்கியுள்ளன. மற்ற இலாகா பூர்வ அதிகாரிகள் நேரடியாக மேலதிகாரிகளின் உத்திரவின் பேரில் திட்டங்களை அமுலாக்குகிறார்கள். மாவட்ட ஒன்றியத்தின் தலைவர், அதன் செயற்குழுவின் தலைவர், கோட்ட வளர்ச்சி அதிகாரிகளின் இணைப்பாளர், ஆவணப் பொறுப்பாளர் ஆகிய சகல மாவட்ட நிர்வாக அதிகாரமும் கலெக்டர்களிடம்தான் உள்ளது. ஆலோசனை கூறும் உரிமை மட்டும்தான் மாவட்ட ஒன்றியத்துக்கு உள்ளது. பஞ்சாயத்துக்கள் தவிர மற்ற பிற இலாகா பூர்வ வளர்ச்சித் திட்டங்களையும் அமுலாக்கும், மேற்பார்வையிடும் அதிகாரம் கலெக்டருக்குத்தான்.

எனவே அதிகாரிகளின் சர்வாதிகார வலைப்பின்னலைத்தாண்டி மக்களுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ எவ்வித அதிகாரமும் கிடையாது. பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல்கள் நடக்காதபோது கூட அவற்றின் சார்பாக அதிகாரிகள்தான் நிர்வாகம் நடத்துகின்றனர்.

இரண்டாவதாக, கிராமப்புற ஆதிக்கம் நிலப்பிரபுக்களிடம் தான் உள்ளது. ஏற்கனவே உள்ள சமூகப் பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையிலே பஞ்சாயத்துக்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். விவசாயத்துக்கு வழங்கப்படும் மானியங்கள், உதவி - கடன்களையும், நவீனக் கருவிகளையும், மின்சாரம், நீர்ப்பாசனம், சாலை வசதிகளையும் நிலப்பிரபுக்களே சுருட்டிக் கொள்வதற்கு பஞ்சாயத்துக்களைப் பயன்படுத்துகிறார்கள். கொத்தடிமை முறை, தாழ்த்தப்பட்டவர்கள் மலைவாழ் மக்களுக்கு எதிரான கொடுமைகள், பெண்ணடிமைத்தனம் அழியாமல் கட்டிக் காக்கப்படும் போது இட ஒதுக்கீடுகள்கூட மக்களுக்குப் பயன்படாது போகும். நிலப்பிரபுக்களின் பினாமிகளும் பிழைப்புவாதிகளுமே பதவிகளைப் பிடிக்க முடியும். நிலச் சீர்திருத்தம் செய்யாமல் பஞ்சாயத்துக்களை சீரமைப்பது ஒரு பலனையும் தராது என்று முதலாளித்துவ ஜனநாயக வாதிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

எனவே, கிராமப்புறங்களில் நிலப்பிரபுக்களின் சமூகப் பொருளாதார அரசியல் ஆதிக்கத்தை வீழ்த்தி மக்கள் அதிகாரத்தை நிறுவி, நிலப்பங்கீடு செய்த பிறகு தான் மக்களுடைய உள்ளூராட்சி உண்மையானதாக இருக்க முடியும். நமது கிராமிய சமுதாயத்தின் மொத்த சமூகப் பொருளாதார அமைப்பையும் மாற்றுவதின்றி வேறு எந்தச் சீர்திருத்தமும் பலனளிக்காது.

◆ ஆர்.கே

## ஆயுட்கைதி சுட்டுக் கொலை! போலீசின் வெறியாட்டம்!

கடந்த 9.5.89 செவ்வாய் கிழமையன்று மாலை ஆறு மணிக்கு கடலூர் மத்திய சிறையிலிருந்து பாலச்சந்திரன் என்ற ஆயுட் கைதியை சென்னையிலுள்ள நீதி மன்றத்துக்கு இரண்டு போலீசார் கொண்டு சென்றனர். வெளியில் வந்ததுமே பா ச்சந்திரன் கைகளில் சங்கிலியுடன் இணைந்த விலங்கினை மாட்டி பிடித்துக் கொண்டனர். போகும் போதே பாலகுமாரன் என்ற போலீஸ் வெறிநாய் குடி போதையில் பாலச்சந்திரனைப் பார்த்து, "கைதி நாயே! வேகமா நட!" திட்டியபடியே துப்பாக்கி கட்டையால் அடித்திருக்கிறான். கைதி பாலச்சந்திரன் "மரியாதையாகப் பேசு!" என்று எதிர்த்திருக்கிறார். ஆத்திரமடைந்த அந்த போலீஸ் நாய், "டேய்! இன்னிக்கு நீ என் கையாலத்தான் சாகப் போற!" என்று மிரட்டியபடியே பேருந்தில் அழைத்துச் சென்றான்.

சென்னை பூக்கடை பேருந்து நிலையத்தில் இறங்கியதும் பசி மயக்கத்தில் இருந்த பாலச்சந்திரனை பூக்கடை காவல் நிலையத்தை நோக்கி இழுத்தனர். பாலச்சந்திரன் வரமறுத்து சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார். போலீஸ் வெறிநாய் பாலகுமாரன், "டேய் தேவடியா மகனே! சட்டமா பேசுற?" என்று வாயில் வந்தபடி திட்டி அவரை உதைத்துக் கீழே தள்ளினான். நான் சாப்பிடாமல் வரமாட்டேன் என்று பாலச்சந்திரன் மீண்டும் உறுதியாக மறுத்ததும், வெறிபிடித்த பாலகுமாரன் தனது துப்பாக்கியை எடுத்து சுட்டுவிட்டான். ஆயுட் கைதி பாலச்சந்திரனின் வலப்புற கண்ணில் குண்டு பாய்ந்து அவரது தலையின் ஒரு பகுதி சிதறிவிட்டது. ஆனாலும் வெறி அடங்காத அந்த போலீஸ் வெறிநாய் மீண்டும் நெஞ்சை நோக்கி சுட, அதே இடத்தில் பாலசந்திரன் துடிதுடித்து மாண்டு போனார்.

கைதி பாலச்சந்திரன் தப்பிக்க முயன்றதாகவும் அதனால் சுட்டதாகவும் காவல் துறையினர் கதை விடுகின்றனர். அரசின் கைக்கூலி பத்திரிக்கைகளும் அதை அப்படியே வாந்தியெடுத்துள்ளன. உண்மையில் பாலச்சந்திரன் தப்பியிருந்தால் எந்த கொம்பனாலும் அவரது கண்ணை குறிவைத்து சுட்டிருக்க முடியாது. இரவு ஒன்றரை மணிக்கு மேல் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் குறைந்தவிட்ட நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு பாலச்சந்திரனைச் சுட்டுக் கொன்றுவிட்டு இப்படி அப்பட்டமாகப் புளுகுகின்றனர்.



ஆயுட்கைதிகளை கேவலமாக நடத்துவதும், சுட்டுவிடுவேன் என்று மிரட்டுவதும் கடலூர் ஏ.ஆர்.போலீஸ் கும்பலின் வாடிக்கையாக உள்ளது. கடந்த மே 2ந் தேதியன்று நக்சல்பாரி அரசியல் கைதி சுந்தரை தேர்வு எழுதுவதற்காக போலீசார் அழைத்துச் சென்றனர். போலீஸ் வேனில் ஏறி அமர்ந்த அவரை, "எழுந்திருடா நாயே! வேன் எங்களுக்கா, உனக்கா? எழுந்து நில்லுடா!" என்று கொச்சையான ஆபாச வார்த்தைகளால் ஏசி, சட்டையைப் பிடித்து இழுத்து கீழே தள்ளினர்.

போலீசாரின் கொலை வெறியாட்டத்தால் மாண்டு போன பாலச்சந்திரனின் மனைவியும் 3 வயது பெண் குழந்தையும் இன்று அனாதைகளாக அழுது புலம்புகின்றனர். பாலச்சந்திரன் கொல்லப் பட்டதை அறிந்து சக ஆயுட் கைதிகளாகிய நாங்கள் கொதிப்படைந்துள்ளோம். மக்களை மாக்களாய் எண்ணி நரவேட்டையாடும் போலீஸ் வெறிநாய்களை இனியும் உழைக்கும் மக்கள் மன்னிக்கக் கூடாது; சரியான பாடம் புகட்டியே தீரவேண்டும்!

தகவல்: ஆயுட் கைதிகள்
மத்தியசிறை, கடலூர்.

படிப்பகம்

www.padippakam.com

# மறைக்கப்படும் விவசாய 'விபத்து'கள்

நாடு முழுவதும் நடக்கும் ரயில் விபத்துக்களில் ஆண்டுதோறும் பல நூற்றுக் கணக்கான மக்கள் உயிர் பலியாவதைத் தான் நாம் இதுவரை கேள்விப்பட்டிருக்கி றோம். அதற்கு இணையாக, பீகார் போன்ற மாநிலங்களில் படகு விபத்துக்களால் பலி யாவோர் எண்ணிக்கையும் கூடுதலாகி வரு வது தினசரி படிப்பவர்கள் அறிந்த செய்தி தான். ஆனால் இதனினும் கொடூரமாக உயிர் பலியாவதும், உடல் ஊனமடைவ தும், உழைக்கும் விவசாயக் குடும்பங்களில் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இந்த ''விபத்து''க்களை அரசு அலட்சியம் செய்வ துடன் திட்டமிட்டே மறைத்தும் வருகிறது! விபத்துக்குள்ளாகும் விவசாயிகள், பயண விபத்துக்களாலோ, கொள்ளை நோய் கண்டோ திடீரென உயிர்பலியாவதோ, ஊனமடைவதோ இல்லை. மாறாக உழைப் புக்கான இடத்திலேயே, உழைத்துக் கொண் டிருக்கும்போதே, சொந்த ஊரில், ரத்தத்தை விற்கச் சென்ற பண்ணை வீடுகளின் வாசலி லேயே ரத்தம் சொட்டசொட்ட திடீரென உடல் ஊனமடைகிறார்கள், உயிரிழக்கிறார் கள்.

குறிப்பாக, வடக்கத்திய மாநிலங்க ளில், மாட்டுத்தீவன தயாரிப்பில் ஈடுபடும் கூலி ஏழை விவசாயிகள் ஆயிரக்கணக்கில் இதுவரை உடல் ஊனமடைந்துள்ளனர். ''விபத்து''க்குப் பிறகு கவனிப்பாரற்று நூற் றுக்கணக்கில் மடிந்தும் போயுள்ளனர். தெற் கத்திய மாநிலங்களில், வைக்கோலை மாட் டுத் தீவனமாக பயன்படுத்துவதுப் போல, வடக்கத்திய மாநிலங்களில் அறுவடைக்கு பின் கோதுமைத் தட்டுகளை, கரும்புச் சோலைகளை (Stalks) அறவை இயந்திரங் கள் மூலம் சிறுசிறு துண்டுகளாக்கி மாடுக ளுக்கு தீவனமாக அளிக்கின்றனர். பெரும்ப டியாக மாடுகள் வைத்திருக்கும் பணக்கார விவசாயிகள், மாட்டுப் பண்ணைகள் வைத்து நடத்தும் நிலப்பிரபுக்கள் இந்த அறவை இயந்திரங்களை வாங்கிப் போட்டு அதில் விவசாயக் கூலிகளை வேலைக்கு அமர்த்துகின்றனர்.

பெரும்பாலும் பெண் விவசாயக் கூலி கள்தான் இவ்வேலைக்கு அமர்த்தப்படுகின் றனர். சமயங்களில் அக்கூலிகளின் குழந்தை களையும் கூட இவ்வேலைகளில் ஈடுபடுத் துகின்றனர். பாதுகாப்பு மிக்க தரமான இயந் திரங்கள், சில நூறு ரூபாய்கள் கூடுதலான விலை விற்பதால், தரம் குறைந்த பாதுகாப் பற்ற அறவை இயந்திரங்களின் மூலம் அப் பாவி கூலி - ஏழை விவசாயிகளின் உடலை ஊனமாக்குவதோடு அவர்களது உயிரை யும் குடிக்கின்றன, லாப வெறிபிடித்த மனித மிருகங்கள்.

மேலும், குறைந்த நேரத்தில் அதிக உழைப்பைச் சுரண்டும் பொருட்டு கைக ளால் இயக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட இவ்வியந்திரங்களை டிராக்டர் இன்ஜின்க ளுடனும், நீர் இறைக்கும் டீசல் இன்ஜின்களு டனும் பொருத்தி அசுர வேகத்தில் இயக்கு கின்றனர். நடைபாதைகளில் இருக்கும் கரும் புச்சாறு பிழியும் இயந்திரங்கள் போன்ற வடி வமைப்புடன் இருக்கும் இவ்வியந்திரங்கள், நவீன ''கெல்லட்டின்''களாக மாறி, கண்ணி மைக்கும் நேரத்தில் முழங்கையை உள்ளி ழுத்து மென்று, சிறுசிறு துண்டுகளாக, துப்பு



அறவை எந்திரத்தில் ஏற்பட்ட விபத்தினால் கை ஊனமான நிலையில் சப்பாத்தி தயாரிக் கும் விவசாயப் பெண்மணி.

கிறது. சிக்குண்டவர்கள் சுதாரித்துக் கொள் வதற்குள், இவ்வளவும் நடந்து முடிந்து விடும்

டில்லி, உயிரியல் ரசாயன பொறியியல் மையமும், சமூக சுகாதாரம் மற்றும் மருந்தக மையமும் இணைந்து நடத்திய ஆய்வில் விவசாய ''விபத்து''க்கள் பற்றியான பல அதிர்ச்சி தரும் உண்மைகள் வெளிவந்துள் ளன.

அரியானா மாநிலம், சோனாபட் மாவட்டத்தைச் சேர்ந்த, பால்வதி. 17 வய தான இவ்விளஞ் சகோதரி, திருமணமான ஒரு சில மாதங்களுக்குள்ளேயே, கணவர் வீட்டில் இவ்வரவை இயந்திரத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, தனது இரண்டு கையையும் மணிக்கட்டோடு இழந் தார். கணவர் வீட்டார், அவரை இனிமேலும் வைத்திருப்பதில் லாபம் இல்லையெனக் கருதி தாய் வீட்டுக்கு துரத்திவிட்டனர். அவரை நிரந்தரமாக கைகழுவிவிட்டு வேறொரு பெண்ணை மறுமணம் செய்துக் கொண்டான், கணவன். இளம் வயதில் வாழ்க்கையை இழந்த அவ்விளஞ் சகோத ரிக்கு அவர் விருப்பத்தையும் மீறி இரண் டாம் தாரமாக ஒரு முதியவருக்கு கட்டி வைத்தனர், அவருடைய ஏழைப் பெற்றோர் கள். முதியவரின் முதல் மனைவியுடன் இப் போது சொல்லி முடியாத துன்பங்களை அனுபவிக்கிறார், பால்தேவி.

இன்னும் பால் மணம் மாறாத குழந்தை உழைப்பாளிகளும் இக்கொடுமைக்கு ஆளாகியிருக்கின்றனர். அரியானாவை யொட்டிய பஞ்சாப் மாநிலத்திலிருக்கும் ஜட் டோலா கிராமத்தைச் சேர்ந்த 5 வயது சீமா, அதே வயது பூணம் துர்கூரைச் சேர்ந்த 5 வயது கிருஷ்ணா, இன்னும் தானாகர்ட், மாந்தரை, கோபால்பூர் கிராமங்களைச் சேர்ந்த, ரகுபீர்சிங், சத்வந்தி, பார்த்தோ இப் படி எண்ணிடலங்காதவர்கள், 5 வயது குழந் தைகள் முதல் 55 வயது முதியவர்கள் வரை இவ்வரவை இயந்திரங்களினால் தங்கள் வாழ்க்கையை இழந்து முடமாகியுள்ளனர்.

பணியிடத்தில் இவ்வாறு உடல் ஊனம டைந்தவர்களுக்கு நிலப்பிரபுக்கள், அவசிய மான முதலுதவி சிகிச்சையோ, அதற்கான உதவிகளையோ கூட அளிப்பதில்லை. இன் னும் கொடூரமான முறையில், அரசு மருத்து வமனைகளில் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதைக்கூட மிருகத்தனமான முறை யில் தடுக்கின்றனர். இதன்மூலம், பாதிக்கப் பட்டவர்கள், சட்டபூர்வ அத்தாட்சி பெற்று இழப்பீட்டுத் தொகை கோரிவிடுவார்கள் என்றுநயவஞ்சகமாகவும்மிரட்டியும் ''விபத் து''க்கள் பதிவாகாமல் தடுக்கின்றனர்.

ஒரு இயந்திரம் நிர்ணயிக்கப்பட்ட தர மின்றி, வடிவமைப்புக் கோளாறுகளால், உபயோகிப்பாளர்களின் உடலுக்கோ, உயி ருக்கோ ஆபத்து ஏற்பட்டால், 83 ஆம் வரு டத்திய ''அபாயகரமான இயந்திரங்கள் ஒழுங்கமைப்பு சட்டத்தின்''படி தயாரிப்பா ளர், நுகர்வோருக்கு சட்டப்படியான இழப் பீட்டுத் தொகை வழங்க வேண்டும். அதே போல, அபாயகரமான இயந்திரங்களை வைத்திருக்கும் உடமையாளர்கள், அதில் பணியமர்த்தும் தொழிலாளர்களுக்கு தமது சொந்த செலவில் விபத்து காப்புறுதி எடுக்க வேண்டும். 1923 ஆம் வருடத்திய தொழி லாளர் ஈட்டுறுதி சட்டத்தின்படி, பணியிடத் தில் விபத்து ஏற்பட்ட தொழிலாளிக்கு உட மையாளர் நட்ட ஈடு வழங்க வேண்டும். மேலும் 3 நாட்களுக்குள் அவ்விபத்தை அர சுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த ஆள் மயக் கும் சரஞ்சரமான தொழிலாளர் நலச் சட்டங் கள் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எவர் ஒருவருக்கும் ஒரு மண்ணும் செய்ய வில்லை.

தேசிய மாற்றாக வலம்வரும், தேவி லால் கும்பல் ஆளும் அரியானா மாநிலத் தில் இக்கொடுமை கொடிகட்டிப் பறக்கிறது. விதவைகளுக்கு ஊதியம், வயது முதிர்ந்த வர்களுக்கும், உடல் ஊனமுற்றவருக்கும் உதவித் தொகை என தேர்தல் வாக்குறுதி களை அள்ளி வீசி ஆட்சிக் கட்டிலைப் பிடித்த தேவிலால் அரசாங்கம், இவ்வாறு உடல் ஊனமடைந்தவர்களுக்கு கூட இது வரை உதவித் தொகை வழங்கவில்லை கையை இழந்தவர்கள், வாழ்வை இழந்தவர் கள் இந்த வெற்று வாக்குறுதிகளை நம்பி, ஊனமடைந்த தங்கள் உடலை புகைப்படம் எடுப்பதற்கும், ஆயிரத்தொட்டு சான்றிய தழ்களை பூர்த்தி செய்வதற்கும் கைப்பணத் தையும் கடன் பணத்தையும் நூற்றுக்கணக் கில் செலவழித்துவிட்டு மேலும் துன்பத்தை சுமந்துக் கொண்டு சிறுகச்சிறுக செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

◆ குணசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

# சர்வமும் சந்தர்ப்பவாதம்!



அரசியலில் அநாமதேயங்களாகிப் போன அ.தி.மு.க. நான்காவது அணியின் நிறுவனர்களில் ஒருவரும், அரசியல் சொத்தையுமான காளிமுத்து, ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வில் இணைந்துள்ளார். சமீபத்தில், பெரும்பாலான அரசியல் பார்வையாளர்களை புருவத்தை நெறிக்க வைத்த செய்தி இது.

''பால்கனி பாவை'', ''ஆள் மயக்கி'', ''ஒப்பனைக்காரி'', ''கற்பனைராணி'', ''கவர்ச்சி குதிரை'', ''சேட்டுகள் , சினிமாச் சீமான்கள் கள்ளப்பணத்தில் மஞ்சள் பூசிக் கொண்டிருக்கிற கரன்சி நாயகி'', ''விஜய் மல்லய்யாவின் கள்ளக்காதலி'', ''பால்வினை நோய்க்காரி; எம்.ஜி.ஆரைக் கொன்ற கொலைகாரி'', ''சோபன்பாபுவுக்கு பெற்ற ஊனக் குழந்தையை தலைமறைவாக வைத்திருக்கும் படுபாதகி'', ''ராஜீவுக்கு தேகத்தைக் காட்டி அன்னை ஜானகியின் ஆட்சியைக் கலைத்த கோடாரி'', என்று நேற்றுவரை மலத்தொட்டியை நாக்கில் வைத்துக் கொண்டு வலம்வந்த காளிமுத்து, இன்று அதை அப்படியே விழுங்கி விட்டு, அந்த இடத்தில் இப்போது ஜெயலலிதாவை பெருமையாக சுமந்துக்கொண்டு வலம் வருகிறார்.

''புயல் காற்று வீசியபோதும், ஒடிந்து விடாமல் அசைந்தாடி மணம் பரப்பிய, புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசு ஜெயலலிதாவே இனி என் தலைவி.. புரட்சித் தலைவரின் ஆட்சியை அமைப்பதற்காக தன்னையே மெழுகாக உருக்கிக் கொள்ளும் ஜெயலலிதாவே உண்மையான புரட்சித் தலைவி... இதுநாள் வரை நான் அவரை ஏசிப்பேசியதற்கு பிராயச்சித்தம் தேடி புறப்பட்டு விட்டேன்..'' என்று காஞ்சிபுரம் கூட்டத்தில் உருகிப் போனார். மேலும், ஜெயலலிதாவை தாக்கி அவ்வப்போது அவர் வாயிலிருந்து வழிந்த, ''புரட்சி மலர்கள்'' என்ற ஆபாசவெளியீட்டையும் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

உங்கள் திடீர் மனமாற்றத்திற்கு காரணம் என்ன? ஜெயலலிதாவின் அணுகுமுறையில் ஏதாவது மாற்றம் கண்டீர்களா? என்ற நிருபர்கள் கேட்டதற்கு, ''இதற்கு முன்னால் எனக்கு அவரைப் பற்றி அதிகம் தெரியாது! எனவே, என்னால் இதற்கு பதில் சொல்ல முடியாது'', என்று வாலைக் குழைந்தார்.

அப்படியானால் ஜெயலலிதாவை இதற்கு முன் நீங்கள் ஆபாசமாக ஏசிப்பேசியதை தவறு என்று ஒப்புக் கொள்வீர்களா என்பதற்கு, ''..... அப்போது, ஒருவருக்கொருவர் கடுமையாக விமர்சித்துக்கொண்டோம்.... குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற முதுமொழியே இருக்கிறது! ஒருவருக்கொருவர் குற்றம் சுமத்திக் கொண்டேயிருந்தால், உறவு ஏற்படாது.... இப்போது இதை நாங்கள் முழுமையாக உணர்ந்துள்ளோம்.... அரசியலில் உறுதியான நிலை என்பதற்கே இடமில்லை. அதனால் மக்களுக்கும் எந்த பிரயோசனமும் இல்லை'' என்று மதிநுட்ப அரசியலாக கக்கினார்.

**அரசியல் விபச்சாரிகள் இணைந்தனர்**

மத்திய அரசால் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அதிகாரத்தை இழந்து அரசியல் முடமானதோடு, தேர்தலில், எம்.எல்.ஏ. பதவியோடு டெபாசிட்டையும் பறிகொடுத்து அரசியல் அநாதையானவர், பட்டியிலிருந்து விரட்டப்பட்ட பன்றி அசிங்கத்தை தேடி கண்ட கழிவுகளில் மூக்கை வைப்பதுபோல, பதவிக்காக, மேய்ச்சலிருக்கும் தி.மு.க.வின் மேல்மட்டம், நடுமட்டமெல்லாம் அலைந்து அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டவர். மடிநிறைய இல்லாவிட்டாலும், கடுகளவாவது அதிகாரமும், பதவியும், பணமும் கிடைப்பது உறுதியானவுடன் ஜெயலலிதாவிடம் தாவி, ''முந்தானைப் பந்தலில்'' தஞ்சம் புகுந்துக் கொண்டார்.

இதேபோல், தற்போது தமிழகத்தில் மூப்பனாருக்கும், வாழப்பாடி ராமமூர்த்திக்கும் நடக்கும் குடுமிப்பிடி பதவிச் சண்டை, அக்கும்பல்களின், அதன் தலைமையின் மோசடி அரசியலை நடுத்தெருவில் போட்டு உடைத்திருக்கிறது. பதவிச் சண்டை, கட்சி அதிகாரத்தில் பங்கு பிரிப்பதில் நடக்கும் அடிதடி பேரம், எந்த பிராந்தியக் கட்சியின் மீது சவாரி செய்வது என்று தேர்ந்தெடுப்பதில் சண்டை; அது கூட கொள்கை அடிப்படையில் அல்ல! எந்த கட்சியின் முதுகு பெரிதாக இருக்கிறது. பாரம் தாங்குமா, தாங்காதா என்று தெரிவு செய்வதில் தகராறு! இதை இன்னும் விளக்கமாக அக்கட்சியின் தற்போதைய தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி விளக்குகிறார்,

''அரசியலில் நிரந்தர நண்பர்களோ, நிரந்தர விரோதிகளோ கிடையாது. எது எங்களுக்குப் பலனளிக்குமோ, அதை நாங்கள் செய்யத்தான் செய்வோம். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை. இப்போது தி.மு.க. கூட்டணி என்பதை நாங்கள் வைத்துக் கொண்டாலும் கூட (மூப்பனார் வாதப்படி) நடைபெற்ற கடந்த இடைத்தேர்தலில் இரண்டு தொகுதிகளில் (மதுரை, மருங்காபுரி) முடிவுகளின்படி நாங்களும், தி.மு.க.வும் சேர்ந்தால்கூட, அ.தி.மு.க.வோடு (ஜெயலலிதா கட்சி) 'மேட்ச்' பண்ண முடியாதே? அதுதான் இப்போது நிலவரம். கண்முன்னால் நடந்திருக்கக் கூடிய சமாச்சாரம். ஆகவே, வரவிருக்கிற பாராளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததால் காங்கிரசுக்கு எது அதிகமான பலனைத் தரமுடியுமோ, அதன் அடிப்படையில்தான் நாங்கள் கூட்டு சேருவோம்'' (கேள்வி: ஆக சீட்டுக்களின் அடிப்படையில்தான் கூட்டணி என்கிறீர்களா, ''ஆமாம்'')

கருத்துக்கள், கொள்கைகள் என்ற அடிப்படையில் இல்லையா? ''கருத்துக்கள், கொள்கைகள் எந்தக் கூட்டணியிலும் கிடையாது. பிறகு இதில் (காங்கிரசில்) மட்டும் எப்படி இருக்க முடியும்? எந்தக் கூட்டணியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். கருத்து, கொள்கை எங்கே இருக்கிறது. சொல்லுங்கள். உதாரணமாக, தமிழ்நாட்டில் கருணாநிதியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டணி. ஆனால், கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், முஸ்லிம் லீக்கும் கூட்டணி கிடையாது. அதைப்பற்றி கேட்டபொழுது நம்பூதிரிபாட் சொன்னார்: 'எங்களுக்கும், தி.மு.க.வுக்கும் தான் உறவு. தி.மு.க.வுக்கும், முஸ்லிம் லீகிற்கும் இடையிலான உறவு பற்றி எங்களுக்கு கவலை இல்லை'— என்றார். இதில் பெரிய கொள்கையோ, லட்சியப் போக்கோ கிடையாது'' (துக்ளக் - 1.5.89)

''யாருடன் வேண்டுமானாலும் நான் படுப்பேன். அது எனது உரிமை''—பாமிலா என்ற சர்வதேச விபச்சாரியின் தன்னிலை விளக்கம் இது. இதற்கும் ராமமூர்த்தியின் நீண்ட வாக்குமூலத்திற்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா? இருவேறு உலகங்களில் வாழும் இருவராலும் எப்படி ஒரே குரலில் பேசமுடிகிறது! எப்படி ஒரே கோணத்தில், செயல் தந்திரம் வகுக்க முடிந்தது! இருவரும் தேர்ந்தெடுத்துக் கொண்ட தொழில்தான் வேறு! குறிக்கோள் ஒன்றுதான், பிழைப்புவாதம்!

இதே உதாரணத்தைக் கொண்டுதான் வி.பி.சிங்கை சாடினார், காங்கிரசின் மத்திய மந்திரி கே.கே.திவாரி. இதே உதாரணத்தைக் கூறித்தான் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை சாடினார், ராஜீவ் காந்தி. இது

படிப்பகம்

www.padippakam.com



ஆதிபராசக்தியும் ஆன்மீகத் திராவிடமும்

ஏதோ ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளிடையே நடக்கும் வழக்கமான அவதூறு அல்ல. நிதர்சனமான உண்மை!

காங்கிரசிலிருந்து வெளியேறி தேசீய முன்னணியைக் கட்டியிருக்கும் அத்தனை தலைவர்களும் நிலவும் கறுப்புச் சட்டங்கள் அனைத்தையும் காங்கிரசிலிருந்தபோது ஆதரித்தவர்கள்; மாநில அரசாங்கங்கள் கலைப்பது பற்றி கூப்பாடு போடும் இவர்கள் இதற்கு முன் பல மாநில அரசுகளை கவிழ்க்கவும், அதற்கான சட்டமியற்ற ஏற் மூளையாக இயங்கியவர்கள். இவர்களில் எவர் ஒருவரும் காங்கிரசுக் கட்சியின் கொள்கை, கோட்பாடுகளிலிருந்து முரண்பட்டு வெளிவந்தவர்கள் அல்லர். பதவிப் போட்டியில், கோஷ்டி சண்டையில் கடைசியில் கழித்துக் கட்டப்பட்டவர்கள். அல்லது பலமிழந்த நிலையில் வெளியில் வந்தவர்கள். வந்த பிறகும் இழந்த பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஒன்றிணைந்தவர்கள். இப்போது, பதவியைப் பிடிப்பதற்கு முன்னரே பதவி சண்டையில் ஈடுபட்டு நொறுங்கிப் போய் கிடக்கிறார்கள்.

மேற்கூறிய கட்சிகளுடனும் கும்பல்களுடனும் பல்வேறு சமயங்களில் மாறிமாறி கூட்டு வைத்துக் கொண்டாலும் "நாங்கள் கொள்கை கூட்டணிவாதிகள். சொந்த கோட்பாட்டு இலட்சியத்தை இழக்காத திராவிட பாரம்பரியத்தின் வழிவந்தவர்கள், சுயமரியாதை, தன்மானம், கடவுள் மறுப்பு, மொழிப்பற்று, தமிழர் நலன் போன்ற குறிப்பான கொள்கையுடையவர்கள்; ஜனநாயகத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள்; கட்சிக்குள் ஜனநாயகத்தை இன்றளவும் கடைபிடிப்பவர்கள். அதிகாரத்தில் இல்லாமலேயே 13 ஆண்டு காலம் அரசியல் நடத்திய உலகமகா அதிசயங்கள் நாங்கள்!" என்று பறையடிக்கும் தி.மு.க. கட்சியின் பிழைப்புவாத அரசியல்,

★ "அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் சுடுகாடு" என்ற தி.மு.க.வின் 'பழைய' விசயத்திற்கு கூட நாம் போகவில்லை. "தனி ஈழமே தீர்வு" என்று 100 நாட்களுக்கு முன் எடுத்த சூளுரையும் அதற்கு முதல் பலியாக தேவையென்றால், கருணாநிதி இந்த உயிரையும் கொடுக்க தயங்கமாட்டான் என்ற வீர வசனமும், இப்போது ராஜீவின் வீட்டு வாசலில் கிடக்கின்றன.

★ ஆட்சிக் கட்டிலிருந்து ராஜீவை துரத்துவதற்கு தேசீய முன்னணித் தலைவர்களுடன் சேர்ந்து பொதுக்கூட்ட மேடையில் துப்பாக்கியை நிமிர்த்துவது மாதிரி கையை உயர்த்திய கருணாநிதி, இப்போது கர்நாடக அரசு கவிழ்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தேசீய முன்னணியின் அறிக்கையில் கைநாட்டு வைக்கவும் மறுத்துவிட்டார். "தம்பி" சிவாஜிகணேசன் கூட அந்த எதிர்ப்பு அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளார்.

★ 14 வயதிலேயே தமிழர் நலனைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்து அந்த வயதிலேயே பெரியாரிடம் பகுத்தறிவுக் கொள்கை கற்றதாக பீற்றிக் கொள்ளும் கருணாநிதி, 'அதிர்ஷ்ட்ட'வசமாக ஆட்சியைப் பிடித்தவுடன் குடும்பத்தோடு சென்று குலதெய்வத்திற்கு நன்றி செலுத்தினார். கடவுள் மறுப்புக் கொள்கையை நம்பி ஓட்டுப் போட்டவர்களுக்கு பட்டை நாமம் சாத்தினார்! ஆட்சிக் கதவை பண்டாரங்களுக்கு தாராளமாகத்திறந்து விட்டு, பங்காரு பண்டாரத்தை குடும்பப் பண்டாராமாக்கிக் கொண்டார். மூட நம்பிக்கை ஒழிப்பு, கடவுள் மறுப்புக் கொள்கையை காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

★ எம்.ஜி.ஆர். அரசு டில்லியில் ஆட்சிக்கு காவடி தூக்கியதை சாடிய கருணாநிதி, இன்று தனது தர்பாரைக் காப்பாற்றிக் கொள்ள ராஜீவின் கருணை பார்வைக்கு தவமிருக்கிறார். தரகு வேலைக்காக அருகில் வைத்திருக்கும், அரசியல் மாமா மனோகரனை புழக்கடை வழியாக டெல்லிக்கு அனுப்பி வரம் கேட்டார்

★ மேலும், கவர்ச்சிகாட்டி மக்களை வீழ்த்த பாலச்சந்தர் முதல் பாரதிராஜா வரை, விஜயகாந்த் முதல் சிரிப்பு நடிகன் எஸ்.எஸ். சந்திரன் வரை, ராதிகா முதல் லஷ்மி வரை மொத்தமாக கோடம்பாக்கத்தையே வலைவீசி குத்தகைக்கு எடுத்திருக்கிறார். அவர்கள் இவருக்கு பட்டம், பாராட்டுக்கள் வழங்க, சுய விளம்பரக் கொடி கட்டி பறக்கிறது. இப்போது கருணாநிதியும், சினிமா கதாநாயகன் 'சைஸ்சில்' சென்னை தெருக்களில் பிரமாண்டமாய் சிரிக்கிறார்.

எம்.ஜி.ஆரின் இருண்ட ஆட்சியில் 13 ஆண்டு காலம் தாம் அதிகாரம் இல்லாமலேயே, அரசியல் நடத்தியதாகப் பம்மாத்து செய்யும் கருணாநிதி, உண்மையில் அப்போதும் அரசியல் நடத்தவில்லை,பிழைப்புதான் நடத்தினார். கருணாநிதி அப்போது எம்.ஜி.ஆரின் கவர்ச்சி அரசியலை எதிர்த்துக் கொண்டே மறுபுறம் வெட்கமில்லாமல், டஜன் கணக்கில் சொந்தமாக சீரழிவு சினிமா படங்கள் எடுத்ததையோ, பல படங்களுக்கு சீரழிவு கருத்துக்களை உள்ளடக்கிய கதை வசனங்கள் எழுதிக் கொடுத்து காசு பண்ணியதையோ கூட இங்கு நாம் குறிப்பிட வரவில்லை.

மக்களின் தேவைகளை, விருப்பங்களை அரசியல் உணர்வுகளை, ஈழத்தமிழர்களின் மீது கொண்ட இயற்கையான பற்றை ஜனநாயகத்துக்கான போராட்டங்களை தமது அரசியல் வாழ்வுக்கான உரமாக்கிக் கொண்டு, மக்களுடன் சேர்ந்து தாமும் எதிர்ப்பதாக தம் கட்சியும் அதில் குதிப்பதாக, அறிக்கை விட்டு இயக்கங்கள் நடத்தியவர், இன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன், எம்.ஜி.ஆர். பாணியில் தான் ஆதரவாக இருந்த கருத்துக்கள் அனைத்தையும் எதிர்ப்பது எதைக்காட்டுகிறது?


ஆனால் இதற்கு கருணாநிதியும், அவரது கட்சித் தலைமையும் சூட்டும் பெயர் என்ன? "அரசியல் தந்திரம்", "வேகத்தை குறைப்பது", "விட்டுப்பிடிப்பது", "சாதூரியமாக சாதிப்பது", "எதிரியையும் கவர்ந்திழுப்பது" அப்படி எந்த ஒரு வெங்காயமும் இதில் இல்லை. இதன் பெயர்தான் பிழைப்புவாதம். இதன் பெயர்தான் சந்தர்ப்பவாதம். ஆனால், இதைத்தான் மக்களுக்கான அரசியல், பாதிப்பில்லாத அரசியல் என்று நம்ப வைக்கிறார்கள் ஓட்டுப் பொறுக்கிகள்.

ஆனால் இதுதான் உண்மையில் அபாயகரமான அரசியல்! எதற்காக மக்கள் போராட்டத்தை துவக்கினார்களோ, அந்த பாதையில் ஒரு அடி கூட வெற்றியடைய முடியாமல் தொடர்ந்து அவர்கள் சாகிறார்கள். ஓட்டுப்பொறுக்கிகளால் திரும்ப திரும்ப வழிமறிக்கப்பட்டு பிழைப்புவாத அரசியலால் மூர்க்கமாக மீண்டும் மீண்டும் பின்னுக்கு இழுக்கப்பட்டு முன்னேறவே முடியாமல், முடிவேயில்லாமல், பரிதாபகரமாக சாகிறார்கள். மக்களுக்கு அபாயகரமான இந்த காந்தீய பயங்கரத்தை (பிழைப்புவாதத்தை) ஓட்டுப் பொறுக்கிகள் அரசியலில் மட்டுமல்ல மக்களின் வாழ்வியல் கோட்பாட்டிலும் தங்கள் பிரச்சார பலத்தின் மூலம் திணிக்கிறார்கள்; நிலைநாட்டுகிறார்கள். இதன்மூலம் ஒரு உறுதியான சமூக அடித்தளத்தை, பிழைப்புவாத, சந்தர்ப்பவாத அரசியலுக்கு உருவாக்கிக், கொள்கிறார்கள்.

மோசடி, சூழ்ச்சி, நம்பிக்கை துரோகம், காட்டிக் கொடுத்தல், கருங்காலித்தனம், இவ்வளவும் சேர்ந்தது தான் பிழைப்புவாதம்! இதன் ஓட்டுமொத்தக் கலவைதான் சந்தர்ப்பவாதம்!

**குணசேகரன்**

www.padippakam.com




# சிந்தனையைத் தூண்டும்

## பாசிச கும்பலின் சாதனை!?

தேசம் திவால் நிலையை நோக்கி வேக மாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. 1981ல் சர்வ தேச நிதி நிறுவனத்திடம் (IMF) 5000 கோடிக்கு (இன்று அதன் மதிப்பு 6000 கோடி ரூபாய்) கடன் வாங்கி பாசிச இந்திரா தேசத்தையே அடகு வைத்தார். இன்று அவரது வாரிசு ஆட்சியில் அன்னியக் கடன் மட்டும் ரூ.80,000 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் தலையிலும் ரூ.1000 கடன் சுமையாக ஏற்றப்பட்டுள்ளது. இதுதவிர உள்நாட்டுக் கடனையும் சேர்த்தால் மொத்தக் கடன் 2,50,000 கோடி ரூபாயாக இருக்கும் என்று முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே கூறுகின்றனர். அதாவது பிறந்த குழந்தையையும் சேர்த்து ஒவ்வொருவரின் முதுகில் ரூ.3,000 கடனாக சுமத்தப்பட்டுள்ளது. ஒரு வினாடிக்கு ரூ.25,000 என்ற வகையில் இரவுபகல் பாராமல் திருப்பிச் செலுத்தினாலும் மொத்தக் கடனை அடைக்க ஏறத்தாழ 40 வருடங்களாகும்!

அர்ஜெண்டினா, மெக்சிகோ, பிரேசில் ஆகிய திவாலாகிவிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளை அடுத்து உலகின் கடன்கார நாடுகளில் 4வது இடத்தை வகித்து புதிய 'சாதனை' படைத்துள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்து நாட்டை முன்னேற்றக் கிளம்பிய பாசிச ராஜீவின் ஆட்சியில், வாங்கும் மொத்தக் கடனில் திருப்பிச் செலுத்தப்படும் வட்டியின் விகிதமும் கடந்த ஐந்தாண்டுகளில் இருமடங்காக உயர்ந்து அதன் சுமை முழுவதும் மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ளது. 1985ல் 12.3% ஆக இருந்த வட்டி விகிதம் இன்று 26%க்கும் மேலாக அதிகரித்துள்ளது. அதாவது வாங்கும் கடனில் காற்பங்குக்கும் மேலான தொகை பழைய, புதிய கடன்களுக்கு வட்டி செலுத்தவே போய்விடுகிறது. எனவே மீண்டும் இந்தியா. குறிப்பாக, பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சிக்கு வந்த பிறகு 4 ஆண்டுகளில் மட்டும் அந்நியக்கடன் 65% அதிகரித்துள்ளது. 1985ல் ரூ.35,725 கோடியாக இருந்த அந்நியக்கடன் 1987ல் ரூ.53,817 கோடியாக உயர்ந்தது. இன்று 80,000 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடன் வாங்குவதை தவிர பாசிச கும்பல் வேறு வழி தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. வரப்போகும் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்துக்கு சாதகமாகி விடும் என்பதாலேயே உலக வங்கியிடம் கடன் வாங்கவில்லையே தவிர, நிதி நெருக்கடி தீவிரமாவதால் மீண்டும் கடன் வாங்கவே ராஜீவ் கும்பல் விழைகிறது.

கட்டுப்பாடற்ற அன்னியக் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டு தேசத்தைத் திவாலாக்கிய பாசிச ராஜீவ் கும்பலிடமிருந்து சாதனையாக வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

## தொடரும் காட்டுமிராண்டித்தனங்கள்

அரசு ஆதரவோடு ஆண்டுதோறும் இந்தக் காட்டுமிராண்டித்தனம் அரங்கேறுகிறது. ஒருவரல்ல, இருவரல்ல, மாநிலம் முழுவதும் பல நூற்றுக்கணக்கான இளங்குழந்தைகளுக்கு கோலாகலமாகத் திருமணம் நடக்கிறது. போலீசார் வேடிக்கை பார்க்கின்றனர். சட்டங்கள் அங்கே செல்லுபடியாவதில்லை. ஆளும்கட்சி -எதிர்க்கட்சி பிரமுகர்கள், மந்திரிகள், அரசு உயரதிகாரிகள், சீருடை அணியாத போலீஸ் அதிகாரிகள் முதலான முக்கியப் புள்ளிகள் விருந்தினர்களாகப் பங்கேற்கின்றனர்.

''அக்ஹா தீஜ்'' எனும் விழா நாளையொட்டி ராஜஸ்தான மாநிலத்தில் கடந்த மே 8ம் நாளன்று பல நூற்றுக்கணக்கான இளங்குழந்தைகளுக்கு திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளது. 5 வயது 10 வயது குழந்தைகள் மட்டுமின்றி பால்மணம் மாறா பாலகர்களுக்குக் கூட அவர்தம் பெற்றோர்களால் திருமணம் நடத்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்பு ராம் சிங் விஷ்ணோய் என்ற மந்திரியே தனது மகளுக்கு கட்டாய குழந்தைத் திருமணம் செய்து சித்திரவதைப்படுத்தியதை பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தின. ஆனாலும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராஜஸ்தானில் நடப்பது போலவே இங்கே சிதம்பரத்தில் தீட்சிதர்கள் குழந்தைத் திருமணங்களை இரகசியமாக செய்கின்றனர்.

உடன்கட்டை ஏற்றுவது, குழந்தைத் திருமணம், நரபலி, தேவதாசி முறை, நிர்வாண பூசை, வரதட்சிணை முறை முதலான காட்டுமிராண்டித்தனங்கள் அரசு ஆதரவோடு தொடர்ந்து நடந்து வருகின்றன. நிலப்பிரபுத்துவத்துக்கும் முந்தைய பழங்காட்டுமிராண்டித்தனங்கள் ஒருபுறம். அதைக் கட்டிக்காக்கும் அரசியல் கட்டமைப்பு மறுபுறம். இந்த லட்சணத்தில் நாட்டை 21ம் நூற்றாண்டுக்கு முன்னேற்றப் போகிறதாம், ஆளும் பாசிச கும்பல். நம்புங்கள்!

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூர் அருகிலுள்ள சிவதாஸ்பூர் கிராமத்தில் நடந்த குழந்தைத் திருமணத்திற்கு அலங்கரிக்கப் பட்டுள்ள மணமகன்கள் - 8 வயது காசிராம், -5 வயது பிரபுராம்.



படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## போலிகளின் கேடுகெட்ட ஆட்சிக்கு இன்னுமொரு சாட்சி

**போ**லிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில் கல்கத்தா புறநகர் பகுதியான பெகாலாவில் நடந்த ஆண்டு ஜூன் - ஜூலை மாதங்களில் அரசு நியாயவிலைக் கடையில் விற்பனை செய்யப்பட்ட கலப்பட கடுகு எண்ணையைப் பயன்படுத்திய 569 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பெரியவர்கள், குழந்தைகள் உட்பட அனைவரது கை கால்கள் மரத்துப்போனது. (பார்க்க: புதிய ஜனநாயகம், இதழ் எண் 3/19, 16/31 ஆகஸ்ட் '88)

நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முறையே மாதம் ரு.100, 200, 300, 400 என்று பாதிக்கப்பட்டோரின் தன்மையையும் எண்ணிக்கையையும் பொருத்தது நிவாரணமளிப்பதாக போலிகளின் அரசு அறிவித்தது. "ஆனால் அந்த நிவாரணத் தொகை கூட முறையாகக் கிடைப்பதில்லை. 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு 400 ரூபாய் நிவாரணத்தைக் கொண்டு என்ன செய்ய முடியும்?" என்று வேதனையோடு கேட்கிறார் ஒரு பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர். "சம்பாதிக்கும் குடும்பத்தலைவர் முடமாகிப் போனதால் குறைந்தது 325 குடும்பங்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளன. கொடுக்கப்படும் நிவாரணத் தொகையைக் கொண்டு எங்களால் உயிர்வாழவே முடியாது. பட்டினி கிடந்து சாவதைவிட நாங்கள் தற்கொலை செய்து கொள்வதே மேலானது" என்று மனமுடைந்து கூறுகிறார். இக்கலப்பட எண்ணெயால் பாதிக்கப்பட்டவரும், பாதிக்கப்பட்டோர் நலச் சங்கத் தலைவருமான உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பர்சாத் அலி.

ஏறத்தாழ ஓராண்டாகியும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. நத்தை வேகத்தில் வழக்கு நகர்கிறது. இதை எதிர்த்தும், குற்றவாளிகளை உடனே தண்டிக்கக் கோரியும், கூடுதல் நிவாரணம் கோரியும் பாதிக்கப்பட்ட மக்கள் அலிப்பூர் வழக்கு மன்ற வளாகத்தில் சமீபத்தில் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

போபால் விஷவாயு 'விபத்'தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வஞ்சகத் தீர்ப்பை எதிர்த்து சாடும் போலிகளின் யோக்யதை இது தான்! 'இடதுசாரி' அரசுகள் மூலம் மக்களுக்கு இடைக்கால சேவை செய்து புரட்சிக்குத் தயாரிப்பு செய்வதாக போலிகள் பிதற்றினார்கள். ஆனால் அவர்களது ஆட்சிக்கும் இதர ஓட்டுக் கட்சிகளின் மக்கள் விரோத ஆட்சிக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டார்கள்.

## ஜனநாயகத்தின் மாண்பு!

**ரௌ**டித்தனமே அரசியலாகவும், ரௌடிகளே ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளாகவும் இருப்பது இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தனிச்சிறப்பு! கள்ளச்சாராயம் பெருக்கெடுத்தோடும் குஜராத் மாநிலத்தில் காந்தி பிறந்த போர்பந்தரில் சமீபத்தில் முனிசிபாலிடி தேர்தல் நடந்தது. அரசியல் கொள்கையையோ, மக்கள் செல்வாக்கையோ நம்பிப் பலனில்லை என்று முடிவு செய்துவிட்ட காங்கிரசு கழிசடைகள், ரௌடிகளையும், கிரிமினல் பேர்வழிகளையுமே வேட்பாளர்களாக நிறுத்தினர். இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக காங்கிரசு கட்சியைச் சேர்ந்த 10 கிரிமினல் பேர்வழிகளையும், குண்டர்களையும் சிறையிலிருந்து விடுவிக்க அரசு ஏற்பாடு செய்தது. இவர்கள் மட்டுமல்ல, போட்டியிடும் 108 வேட்பாளர்களில் 70 பேர் ரௌடிகள்; சிறை புகுந்த 'செம்மல்'கள்! வேடிக்கை என்னவென்றால் இந்த குண்டர்கள் அனைவரும் காந்திசிலைக்கு மாலையணிவித்து வணங்கிவிட்டு வேட்புமனு தாக்கல் செய்



தார்களாம்! 10 தொகுதிகளில் இவர்களை எதிர்த்து நிற்க யாரும் முன்வராததால் அத்தொகுதிகளில் தேர்தலுக்கு முன்பே இந்த ரௌடிகள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர். இதன் மூலம் 'அகிம்சாமூர்த்தி'யின் வாரிசுகள் 'வன்முறை'யைத் தவிர்த்து 'ஜனநாயக'த்தை நிலைநாட்டி விட்டார்கள்!



**இ**தோ, இங்கே சமஸ்கிருத பண்டித முனிவரிடம் ஆசி பெறுவது யார் தெரியுமா? சாட்சாத் மே.வங்க போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுதான்! கல்கத்தாவில் கடந்த ஏப்ரல் 30 அன்று சமஸ்கிருத கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கலந்து

## இந்து கம்யூனிஸ்டுகளின் சமஸ்கிருத மோகம்

கொண்ட ஜோதிபாசு, ஆசிபெற்ற பூரிப்பில் 360 சமஸ்கிருத பண்டிதர்கள், வேத விற்பன்னர்களுக்கு பரிசும், பதக்கமும் பாராட்டும் அளித்து கௌரவித்தார். என்ன 'அருள்' வந்து இறங்கியதோ! பார்ப்பனர்களின் இறைவழிபாட்டு மொழியான சமஸ்கிருதம் "தொன்மை வாய்ந்த செழுமையான மொழி! எல்லா கல்வி நிறுவனங்களிலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க இடதுசாரி ஜனநாயக அரசு முயற்சித்து வருகிறது" என்று முழங்கினார்.

ராஜீவின் புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதாக நாடகமாடும் போலிகளின் லட்சணம் இதுதான்! இந்து சனாதனிகளைப் பூஜிக்கும் "இந்து கம்யூனிஸ்டு"களாக இவர்கள் சீரழிந்து போனதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. வரப் போகும் தேர்தலில் ராஜீவை வீழ்த்த இந்து மதவெறிக் கட்சியான பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர வேண்டும். அப்போதுதான் இந்துக்களின் ஓட்டுக்களைப் பெறமுடியும். எனவேதான் தங்களது ரஷிய குருபீடத்தின் 'கிளாஸ்நாஸ்ட் - பெரஸ்த்ரோய்கா'' பாணியில் மதப் பண்டாரங்களின் காலை நக்க ஆரம்பித்து விட்டார்கள்!

### அறிவிப்பு

'புதிய கலாச்சாரம்'
முகவரி மாற்றப்பட்டுள்ளது.
படைப்புக்கள் அனுப்பவும்,
அனைத்துத் தொடர்புகளுக்கும்,

அ.முகுந்தன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்
சென்னை-600 049.

— ஆசிரியர், புதிய கலாச்சாரம்

### அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

தவிர்க்கவியலாத காரணங்களால் இதழ் எண் 13 (16-31 மே'89) வெளிவரவில்லை. இதனை முன்கூட்டியே தங்களுக்கு தெரிவிக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

— ஆசிரியர் குழு

★ ☆ ★

படிப்பகம்

www.padippakam.com

'ரெக்ரூட்' ஊழல்

# தகர்ந்தது ஜப்பானியப் பிரமை!

பணம் - அது முதலாளித்துவ அரசியலின் பிரிக்க முடியாத அங்கம். ஊழல் - அது முதலாளித்துவ அரசியலோடு ஒட்டிப் பிறந்த செல்லக் குழந்தை. அண்மையில் ஜப்பானின் அரசியலைக் கலக்கிவரும் ரெக்ரூட் ஊழல் விவகாரம், இதை மீண்டும் நிருபித்து, பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் யோக்யதையை தோலுரித்துக் காட்டியுள்ளது.

"ஜப்பானிய மக்களின் சுறுசுறுப்பைப் போலவே, அந்நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையும் வியந்து பாராட்டத் தக்கது. அங்கே தேர்தல் திருவிழாக்கள் இல்லை. அடிதடி, அராஜகங்கள் இல்லை. ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியான முறையில் தேர்தல்கள் நடக்கின்றன. கள்ள ஓட்டு, வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது முதலானவற்றை காணவே முடியாது. சுருங்கக் கூறினால் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தொட்டிலாக ஜப்பான் திகழ்கிறது" என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகளும் பத்திரிக்கைகளும் கதைத்துத் திரிகின்றனர். ஆனால் இவை அத்தனையும் பொய் என்பதை மீண்டும் தெளிவாக்கிக் காட்டிவிட்டது, ஜப்பானின் ரெக்ரூட் ஊழல் விவகாரம்.

ஜப்பானின் ரெக்ரூட் நிறுவனம், ரியல் எஸ்டேட், சூப்பர் கம்ப்யூட்டர்கள் விற்பனை, தகவல் தொடர்பு, வேலை வாய்ப்பு முதலான பல தொழில்களிலும் கோடிக்கணக்கில் முதலீடு செய்துள்ள பகாசுர நிறுவனம். இந்நிறுவனம் தனது பங்குகளை பொதுமக்கள் முன் விலைக்கு வைக்கப்படுவதற்கு முன்னரே, ஆளுங்கட்சியினர், அதன் ஒவ்வொரு கோஷ்டி தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள், அதிகார வர்க்கத்தினர் முதலான அனைவருக்கும் குறைந்த விலைக்குக் கொடுத்தது. பங்குகளை வாங்க அவர்களுக்கு கடனுதவி கூட செய்தது. பின்னர் பொதுமக்களிடம் இந்நிறுவனத்தின் பங்குகள் விலைக்கு போகும் போது, தாங்கள் முன்னரே வாங்கிய பங்குகளை அதிக விலைக்கு விற்று ஆளுங்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்கள் கொழுத்த லாபம் அடைந்தனர். ஜப்பானின் முன்னாள் பிரதமர் நகசோனேவும் இன்றைய பிரதமர் தாகேஷிட்டாவும் மட்டும் இதன் மூலம் கோடிக்கணக்கில் சுருட்டியுள்ளனர். இது தவிர ஆளுங்கட்சியின் பொதுச் செயலாளர், ஆளுங்கட்சியிலுள்ள பல கோஷ்டிகளின் தலைவர்கள் உட்பட பலரும் இக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தனையும் போதாதென்று ஆளுங்கட்சியின் ஒவ்வொரு கோஷ்டியினரும் கட்சி 'வளர்ச்சி'க்காக நடத்தும் கலை விழாக்களுக்கான நன்கொடை ரசீதுகளை கோடிக்கணக்கில் ரெக்ரூட் நிறுவனம் வாங்கிக் கொண்டு உதவிசெய்யும். இது தவிர முக்கிய புள்ளிகளுக்கு வீட்டுமனைகளும் 'அன்பளிப்பு'களும் ஏராளமாக அள்ளித்தரும். இப்படி பல எலும்புத் துண்டுகளை வீசித்தான் '70களில் சாதாரண விளம்பரக் கம்பெனியாக இருந்த ரெக்ரூட் இன்று பூதாகரமான நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பே இந்த ஊழல் கொள்ளை வெளிவரத் தொடங்கியதும், எதிர்கட்சியும் பத்திரிக்கைகளும் அதை மேலும் கிளறத் தொடங்கியதும் அடுக்கடுக்கான ஆதாரங்கள் அம்பலமாகின. எதிர்கட்சியினர் முழு விசாரணை கோரி பட்ஜெட் கூட்டத் தொடரைப் புறக்கணித்தனர். அரண்டு போன பிரதமர் தாகேஷிட்டாவின் உதவியாளர் பீதியில் தற்கொலை செய்து கொண்டார். தாகேஷிட்டா தார்மீகப் பொறுப்பேற்று, பதவி விலகுவதாக அறிவித்தார். 33 ஆண்டுகளுக்குப் பிறகு பிரதமர் பதவி விலகுவது இதுவே முதன் முறை. ஆனால் ஊழல் கொள்ளையைப் பொருத்த வரை இது முதலுமல்ல; முடிவுமல்ல.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய ஜப்பானில் பணமும் அரசியலும் ஊழலும் பிரிக்க முடியாததாக மாறி விட்டது. உலகப் போருக்குப் பின் இதுவரை மூன்று பிரபல ஊழல்கள் அம்பலமாகியுள்ளன. அஷிடா, யோஷிடா, தனாகா ஆகிய முன்னாள் பிரதமர்களே ஊழல் கொள்ளையின் மூலம் கோடிக்கணக்கில் கொள்ளையடித்தனர்

முதலாளித்துவ ஜனநாயகத்தின் யோக்யதை அம்பலப்பட்ட பின்னரும் கூட, "ஊழல் விவகாரம் வெளியானதும் பிரதமரும் இதர முக்கிய காபினெட் மந்திரிகளும் பதவி விலகுவதைப் பாருங்கள்; இது வன்றோ ஜனநாயகம்!" என்று இங்குள்ள முதலாளித்துவ பத்திரிக்கைகள் பெருமையடித்துக் கொள்கின்றன. ஜப்பானின் பிரதமரும் சில மந்திரிகளும் பதவி விலகுவது முதலாளித்துவ ஜனநாயகத்தின் மேன்மையைக் காட்டவில்லை. முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்ட பின்னரும் பதவி விலகாவிட்டால் மக்கள் முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி முறையின் மீதே அதிருப்தியடைந்து விடுவார்கள் என்ற அச்சம்தான் காரணம். இதை நிருபிக்கும் வகையில், ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிய பிரதமர் தாகேஷிட்டா பதவியில் நீடிக்கலாமா கூடாதா என்று கேட்டு மக்களிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் வெறும் 4% மக்களே தாகேஷிட்டாவுக்கு ஆதரவாக இருந்துள்ளனர். எனவே தான் தனிமைப்பட்ட தாகேஷிட்டா தவிர்க்கவியலாமல் பதவி விலகியுள்ளார்.

ஊழல் கொள்ளையில் அம்பலப்பட்டு பதவி விலகிய ஜப்பானின்பிரதமர்தாகேஷிட்டா.



தாகேஷிட்டா தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகியுள்ளாரே தவிர தாம் தவறேதும் செய்ததாகக் கருதவில்லை என்கிறார். ஊழலில் ஈடுபட்டதாக அவர் ஒப்புக் கொள்ளவுமில்லை. ஈரான் -காண்ட்ரா ஊழல் அம்பலப்பட்ட போது அமெரிக்காவின் முன்னாள் அதிபர் 'ராம்போ' ரீகன் கூட "நான் எனது சொந்த ஆதாயத்துக்காக செய்யவில்லை. தேச நலன் கருதியே செய்தேன்" என்று தனது அயோக்கியத்தனத்தை நியாயப்படுத்தினார். அதே பாணியில் இப்போது ஜப்பானின் பிரதமரும், "நான் ஊழல் எதுவும் செய்யவில்லை. எனதுகட்சியின் வளர்ச்சிக்காக நன்கொடைகள்தான் பெற்றுள்ளேன். இதில் தவறேதும் இருப்பதாகக் கருதவில்லை" என்று சத்தியம் செய்திருக்கிறார். ஊழல் செய்தால் கூட "கட்சியின் நலனுக்காக", "தேசத்தின் நலனுக்காக" என்ற பெயரில் செய்ய வேண்டும் என்பதுதான் இவர்களின் புதுக் கோட்பாடு!.

பொறுக்கி அரசியலின் தரத்துக்கு இன்னும் வெளிப்படையாகச் சீரழியவில்லையே தவிர மற்றபடி இந்திய நாடாளுமன்ற ஆட்சி முறைக்கும் ஜப்பானுக்கும் பெரிய வேற்றுமை ஒன்றுமில்லை. காங்கிரசுக் கட்சியைப் போலவே ஜப்பானிய ஆளுங்கட்சியிலும் ஆயிரத்தெட்டு கோஷ்டிகள். ஒவ்வொரு கோஷ்டியும் தம் செல்வாக்கைக் காட்டவும், கட்சி அணிகளைப் பாதுகாக்கவும் பணத்தைத்தான் நம்பியிருக்கின்றன. தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதும் பணம்தான். ஓட்டுப் பொறுக்கும் போது வாக்காளர்களுக்கு 'நன்கொடை' கொடுப்பது முதல், தொகுதி மக்களின் திருமணம் மற்றும் இறுதிச் சடங்குக்கு 'நன்கொடை' கொடுப்பதுவரை வெற்றி பெற்ற வேட்பாளருக்கு ஏராளமாக பணம் தேவை. எனவே பெருமுதலாளிகளிடம் 'நன்கொடை', 'அன்பளிப்புகள்' பெறாமல் ஜப்பானில் அரசியல் நடத்தவே முடியாது. இதுதான் பீற்றிக் கொள்ளப்படும் ஜப்பானிய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் லட்சணம்!

ஜப்பானிய பிரதமரின் பதவி விலகலைக்காட்டி அதே போல ஊழலில் சிக்கியுள்ள ராஜீவும் பதவி விலக வேண்டுமென்று ஒப்பீடு செய்து எதிர்க்கட்சி பத்திரிக்கைகள் உபதேசிக்கின்றன. ஜப்பானில் அதிகாரத்திலிருப்பது முதலாளித்துவக் கட்சி. ஆனால் இங்கே பாசிச கும்பல் அதிகாரத்திலிருக்கிறது. பாசிச கும்பல்கள் என்றைக்குமே தாமே ஏற்றுக் கொண்ட முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக மரபுகளை மதித்து, கட்டுப்பட்டதாக வரலாறு இல்லை. போராட்டங்கள் மூலம்தான் இத்தகைய கும்பல்களை வீழ்த்த முடியும்.

○ குமார்

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய-சீன எல்லைத் தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

## போரை நிறுத்தியது சீனா! பகையை வளர்த்தது இந்தியா!

1962, நவம்பர் 20ந்தேதி நள்ளிரவு. இந்தியத் தூதரக அதிகாரியைத் தனது வீட்டுக்கு அழைத்த சீனப் பிரதமர் சௌ என்லாய் சீனப் போர் நிறுத்தம் பற்றிய முடிவையும், நிபந்தனைகளையும் விளக்கினார். உடனடியாகப் போரை நிறுத்திவிடுவதாகவும், சீனா ஒருபோதும் ஒப்புக்கொள்ளாத, ஆனால் இந்தியா உரிமை பாராட்டும் மக்மகோன் கோட்டிற்கு வடக்கே 20 மைல் தூரத்துக்கு அப்பால் சீன இராணுவம் பின்வாங்கிக் கொள்ளுவதாகவும், டிசம்பர் முதலாம் தேதி பின்வாங்குவது துவங்கும் என்றும், 1959 நவம்பர் 7ந் தேதி இருந்த கட்டுப்பாட்டு எல்லைக்கு அப்பால் 20 மைல் வரை இந்தியாவும் இராணுவத்தை அனுப்பக் கூடாது என்றும் சீனா அறிவித்தது.

இந்தியப் பிற்போக்காளர்களுக்குப் பாடம் புகட்டுவதும், மீண்டும் பேச்சுவார்த்தைக்கான நிலைமைகளை உருவாக்குவதும் தான் தமது நோக்கமே தவிர பிரச்சினைக்குள்ளான பகுதியைப் பிடித்து வைத்துக் கொள்வது அல்ல என்று சீனா அறிவித்தது. போரிலே வென்ற பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு பேரம் பேசுவதற்குப்பதில் போருக்கு முந்தைய நிலைகளுக்குப் பின்வாங்குவதாக சீனா அறிவித்தது, உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது. 'களத்திலே வெற்றி பெற்ற பிறகு மேலும் கூடுதலான ஆதாயத்துக்காக பேரம் பேசாது ஒரு வல்லரசு தானே பின்வாங்கிக் கொள்வது உலக வரலாற்றிலேயே முதலாவது முறையாக நடந்துள்ளது' என்று பிரிட்டிஷ் அயலுறவுத்துறை மந்திரி காசியா பிரபு இதுபற்றிக் கூறினார்.

போர் நிறுத்தத்தைத் தானும் கடைபிடிக்கும்படி புதிய தலைமைத் தளபதி சௌதிரி உத்திரவு போட்டார். போர் நிறுத்தம் இராணுவத்துக்கு நிம்மதியளித்தது. ஆனால் சிவிலியன் அரசியல்வாதிகளோ அவமானமடைந்ததாக அரற்றினர். நிபந்தனைகளை ஏற்கும்படி அசாம் எம்.பிக்கள் கோரியபோது மற்றவர்கள் கூச்சல் போட்டு அடக்கினர். போர்நிறுத்தம் பற்றிய செய்தி எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை; பேச்சுவார்த்தை பற்றிய தமது நிலைபாட்டில் மாற்றமில்லை என்று கூறி நேரு மழுப்பினார். அந்நாட்களில் அமெரிக்கத் தூதர் கால்பிரைத் ஆலோசனைப்படியே நேரு நடந்து கொண்டார். ''போர் நிறுத்தம் என்பது சீனர்களின் தந்திரம்தான்; எனவே போரைத் தொடர வேண்டும்; பேச்சுவார்த்தைக்குப் போகக்கூடாது'' என்று ஆளும்கட்சி எதிர்க்கட்சிகள் ஆகிய இருதரப்புமே வெறும் வாய்ச்சவடால் அடித்தன. அன்றிரவு போர் நிறுத்தம் பற்றிய சீன அறிவிப்புக் கிடைத்ததாகக் கூறிய அரசு, இராணுவத்துக்கு என்ன உத்திரவு போட்டது என்று கூறவேயில்லை.

'போர் நிறுத்தத்துக்கு அதிகாரபூர்வமாக ஒப்புதல் தெரிவிப்பது தோல்வியை ஒப்புக்கொண்டு சரணடைவதாகும்' என்று கருதியதால் அதிகாரபூர்வமான அறிவிப்பு எதுவுமே செய்யவில்லை. இருந்தபோதும் பள்ளிச் சிறுவர்களிடையே பேசிய மாமா நேரு, ''சீனாவுடனான போர் நீண்டகாலம் நீடிக்கக் கூடியது; அது பல ஆண்டுகள் பிடிக்கும். நீங்கள் வளர்ந்து போரிடும் தகுதி பெறும்வரை கூட நீடிக்கும்'' என்று முழங்கினார். போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்வதற்குப் பதில் கோமாளித்தனமான முறையில் இந்தியத் தலைவர்கள் நடந்து கொண்டனர்.

சீனத்தூதரக அதிகாரியை அழைத்து ''சீனா எதுவரைப் பின் வாங்கும்? மக்மகோன் கோட்டிற்குத் தெற்கே இராணுவச் சாவடிகள் அமைக்குமா?'' என்பது போன்ற பொருளற்ற விளக்கங்களைக் கோரியது, இந்திய அரசு. தாக்லாமலை முகட்டு வரைக்கு அப்பால் சீன இராணுவம் போய் விட வேண்டும் என்று விரும்பியது. கடுமையாக எச்சரிக்கை விடும் வகையில், ''போர் நிறுத்தத்துக்கு உடன்படுகின்றதா, இல்லையா?'' என்று கேட்டு நேருவுக்கு சௌ கடிதம் எழுதினார். பதிலெதுவும் கூறாத நேரு, இலங்கைப் பிரதமராக இருந்த சிரிமாவோ பண்டாரநாயகா மூலம் சௌவுக்கு இரகசியத் தகவல் அனுப்பினார். 2000, 3000 இந்தியத் துருப்புக்களைப் பலியிட்டு விட்டு அவர்களோடு சேர்ந்து ''முன்னேறும் கொள்கை''க்கும் நேரு சமாதி கட்டினார்.

இந்தியாவில் சீன எதிர்ப்புப் பிரச்சாரம்



முழு மூச்சில் தொடர்ந்தது. சீனர்களின் மிருகத்தனமான யுத்தவெறிதான் ஆக்கிரமிப்புப் போருக்குக் காரணம் என்றே இந்தியர்கள் கருதினர். ரஷ்யாவின் எச்சரிக்கை அல்லது அமெரிக்கா போரில் குதிக்கும் என்ற அச்சம் காரணமாகத்தான் சீனா போர்நிறுத்தம் செய்தது என்று காரணம் கூறினர். இந்தியா எதிர்த்தாக்குதல் தொடுத்தால் தாங்க முடியாது என்ற பயத்தினால் பின்வாங்கி ஓடியது என்று தலைவர்கள் கூறினர். 'பொங்கி எழுந்த இந்திய மக்களின் கோபாவேசத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் வாலைத் திருப்பிக் காட்டுகிறது சீனா' என்று சொன்னார் நேரு.

நவம்பர் 21ந் தேதி, வடகிழக்கு எல்லை பிராந்தியத்தில் 48வது பிரிகேடு தகர்ந்ததும் போர்நிறுத்தம் அமுலுக்கு வந்தது. வாலோஸ் மற்றும் சாகு ஆகிய இடங்களில் தோற்றுச் சிதறி ஓடிய இந்தியத் துருப்புக்களைப் பின்தொடரவோ, வளைத்துத் தாக்கிக் கொல்லவோ சீனர்கள் முயலவில்லை . மேற்கு எல்லையில் இந்திய இராணுவம் அவ்வளவு குழப்பமாக இல்லை. சூசுல் பகுதியில் ரெய்ச்சிங்லா மலைகளைத் தாண்டி, சீனர்கள் முன்னேறவில்லை. 1965 ஆம் ஆண்டு இந்திய இராணுவ அமைச்சகம் இழப்புகள் பற்றி பின்வரும் புள்ளிவிவரங்களை வெளியிட்டது. 1383 பேர் மாண்டனர்; 1696 பேர் காணாமல் போயினர்; 3968 பேர் கைதாகினர். அவர்களில் 26 பேர் காயத்துக்குப் பலியாயினர். சீனர்களும் கணிசமானவர் மாண்டு போயினர். என்றாலும் இதுவரை சரியான தகவல் கிடையாது. ஆனால் ஒரு சீனரைக்கூட இந்திய இராணுவம் பிடிக்க முடியவில்லை. இந்தியாவிலே பிரச்சாரம் செய்ததைப் போல பெரும் எண்ணிக்கையிலான இராணுவ பலம் கொண்டு சீனா போரை நடத்தவில்லை. மாவோவின் யுத்த விதிகளைப் பின்பற்றி வெற்றி ஈட்டினர்.

நேருவின் செல்லப்பிள்ளை கௌலை பஞ்சாபுக்கு மாற்றும்படி புதிய தளபதி சௌதுரி சிபாரிசு செய்தார். ஆனால் கௌல் இராணுவத்திலிருந்தே விலகிக் கொண்டார். ''நீங்கள் ஓய்வுபெறுவது குறித்து வருந்துகிறேன். நடந்து போனவைகளுக்குச் சிறப்பாக நீங்கள் மட்டுமே பொறுப்பில்லை. மேலும் பலரும், சூழ்நிலையுமே காரணம். நாட்டுக்குப் பணியாற்றும் பொறுப்பு விரைவிலேயே உங்களுக்கு வரும்'' என்று நேரு கடிதம் எழுதினார். இமாசலப்பிரதேசத்தின் துணை கவர்னராக கௌலை நியமிக்க நேரு முயன்றபோது எதிர்ப்புக்கிளம்பியது பிறகு நேருவின் தயவிலே கோடிக்கணக்கில் அரசு பணத்தை கொள்ளையிட்ட தர்மதேஜாவின் கப்பல் கம்பெனியில் கௌல் பதவி பெற்றார்.

தோல்விக்குத் தலைமையேற்ற தளபதி தபார் ஆப்கானிஸ்தான் தூதராக அனுப்பப்பட்டார். தோல்விக்குத் துணைநின்ற தளபதி சென் தொடர்ந்து பதவியில் சிறிதுகாலம் இருந்து விலகிக் கொண்டார். அவரால் பழிவாங்கப்பட்டவரும், போரை எதிர்த்தவருமான தளபதி பிரசாத் அரசுத் தலைவருக்கு முறையீடு செய்து கொண்டு மீண்டும் பதவி பெற்றார். ஆனால் 1965 பாகிஸ்தான் போரில் அவருடைய ஆவணங்கள் எதிரியி

படிப்பகம்

www.padippakam.com

டம் சிக்கி இந்திய இராணுவத்துக்குள் அவர் நடத்திய எதிர்ப்புகள் அம்பலமாகி பிரச்சாரத்துக்குப் பயன்பட்டது; எனவே அவர் பதவி விலகினார். பொம்மிடிலா தோல்விக்குத் தலைமையேற்ற தளபதி பத்தானியா, போர்நிறுத்தத்துக்குப் பிறகு ராஜினாமா செய்துவிட்டார். இந்தியத் தளபதிகளை எதிர்த்து வாதிட்டவரும் முன்னணிப் படைக்குத் தலைமை ஏற்றவருமான பிரிகேடியர் தால்வியை சீன ராணுவம் கைது செய்து வைத்திருந்தது. அவர் விடுதலையாகி வந்தார்; 1965 பாகிஸ்தான் போரிலே படை நடத்தினார். ஆனால் 1966ல் அவருக்குப் பதவி உயர்வு மறுக்கப்படவே ராஜினாமா செய்துவிட்டார். பிறகு அவர் எழுதிய ''இமாலயத்தவறு'' என்ற நூல் இந்திய இராணுவத் தலைமையின் தவறுகளை அம்பலப்படுத்தியது. கௌல் கும்பலால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த மானெக்ஷா தோல்வியடைந்த படைப்பிரிவுக்குத் தலைமையேற்று இறுதியாக ஃபீல்டு மார்ஷலாக உயர்ந்தார். நேருவின் எடுபிடியும் - அரசியல் மாமாவுமான கிருஷ்ணமேனனுக்கு காங்கிரசு வேட்பாளர் சீட்டும் மறுக்கப்பட்டு 1967க்குப் பிறகு இரு முறை சுயேச்சையாகப் போட்டியிட்டுத் தோற்றார். 1969ம் ஆண்டு ஒரு இடைத்தேர்தல் மூலம் போலிக் கம்யூனிஸ்டுகள் அவரை எம்.பி. ஆக்கினர்.

சீன ராணுவம் பின்வாங்கிக் கொள்ளும் என்பதைக்கூட இந்தியர்கள் நம்பவில்லை. ஆனால் அவர்கள் அறிவித்தபடி டிசம்பர் முதல் தேதியிலிருந்து பின்வாங்கத் துவங்கினர். காயமடைந்த இந்தியத் துருப்புகளையும், ஆயுதங்கள் தளவாடங்களையும் கவனமாகத் திருப்பி ஒப்படைத்தனர். அவை பற்றிய விவரங்களைப் பிரசுரித்துப் பெருமையடித்துக் கொள்ளவில்லை. இந்திய சிவில் நிர்வாக அதிகாரிகள் அவற்றைப் பெற்றுக் கொண்டதோடு, பின்வாங்கிய பகுதிகளின் பொறுப்பையும் மேற்கொள்ளும்படி அனுப்பப்பட்டனர். மக்மகோன் கோடு வரை இந்திய இராணுவம் பொறுப்பேற்றது. அதையும் தாண்டி அசாம் துப்பாக்கிப் படையினரை ரோந்து சுற்ற அனுப்பியது.

போர் நிறுத்தத்துக்குப் பிறகு, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே சீனா விரும்புகிறது என்று ஆசிய - ஆப்பிரிக்க நாடுகள் பலவும் நம்பின. இந்தியாவின் மீது அவற்றின் நிர்பந்தம் அதிகரித்தது. ''ஆனால் சீனாவின் மோசடியான பிரேரணைகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை'' என்று இந்தியா குறை கூறியது. கூட்டுச்சேரா , நாடுகளின் தலைமையிலிருந்து நேருவின் கூட்டாளி எகிப்தின் நாசர் மூலமாக கொழும்பில் ஆறு நாடுகளின் மாநாட்டைக் கூட்டினார்கள். அதிலே இந்தியாவுக்குச் சாதகமான இடைக்காலத் தீர்வு சொன்னார்கள். மேற்கு எல்லையில் இந்திய ஆக்கிரமிப்பை அங்கீகரிப்பதாக அது இருந்தது. எனவே இந்தப் பிரிவு தவிர மற்றவற்றை சீனா ஏற்றது.

பேச்சுவார்த்தைக்கு சீனா நிர்பந்தம் கொடுத்தபோது, இந்திய அரசியல்வாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்கு விடத் தயார் என்று நேரு சொன்னபோது கடும் எதிர்ப்புக் கிளம்பவே அவர் பல்டி அடித்தார். இந்தியா ஒரு தலைப்பட்சமாக உரிமை பாராட்டும் பகுதிகளில் இருந்து சீனா வெளியேறும் வரை பேச்சுவார்த்தை கிடையாது என்றனர்.

நடுநிலைநாயகனாக நடித்த நேரு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளின் தயவை நாடி இராணுவத்தைப் பலப்படுத்தும் வேலையில் இறங்கினார். ரஷ்யாவும் அதை ஆதரித்தது. அமெரிக்க இராணுவ ஆலோசகர் ஆவேரெல் ஹாரிமான், தளபதி பால் ஆடம்ஸ், ரோஜர் ஹில்ஸ்மான் ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமெரிக்காவிலிருந்து வந்தது. டங்கன் சாண்டிஸ் தலைமையில் மற்றொரு இராணுவக்குழு இங்கிலாந்தில் இருந்து வந்தது. ஆயுதங்கள் குவிந்தன. ஆங்கிலேய - அமெரிக்க விமானப்படைகள் இந்தியாவிலே பயிற்சிகள் நடத்தின.

இதற்குப் பதிலாக காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுடன் சமரசம் செய்துகொள்ளும்படி ஹாரிமனும் சாண்டிஸும் நேருவை நிர்பந்தித்தனர். அவர்கள் இந்தியா வந்த ஒரே வாரத்தில் நேரு, பாகிஸ்தான் சர்வாதிகாரி அயூப்கானை சந்திப்பதாக அறிவிப்பு வந்தது. இந்திய அரசியல்வாதிகளிடம் இருந்து அதற்குக்கடும் எதிர்ப்புக் கிளம்பவே மீண்டும் நேரு பல்டி அடித்து பாக் உடன் சமரசம் கிடையாது என்று அறிவித்தார். அமெரிக்க உதவி தயக்கத்துடனே கிடைத்தது. 1965 பாக் -இந்திய போருக்குப் பிறகு அதுவும் நின்றுபோனது. எனவே இந்தியா ரஷ்யாவின் பக்கம் சாய்ந்தது. நேருவுடைய நடுநிலைக் கொள்கை என்பது சந்தர்ப்பவாத சாகசம் என்று அம்பலமானது. சீனாவுக்கு எதிராகப் போரைத்தூண்டி கடுமையான உதை வாங்கிக் கொண்டபோதும் இந்தியர்கள் சுய திருப்தியில் மூழ்கடிக்கப்பட்டனர். ''தோல்விக்குக் காரணம் இந்திய அரசோ, இராணுவமோ அல்ல; பெரும் எண்ணிக்கையில் வந்து ஏதோ சூழ்ச்சி செய்து சீனர்கள் முன்னேறிவிட்டனர்'' என்றே இப்போதும் பிரச்சாரம் நடக்கிறது. மேஜர் - ஜெனரல் ஹெண்டர்சன் புருக்ஸ் மற்றும் பிரிகேடியர் பகத் தலைமையில் தோல்விக்கான காரணத்தைக் கண்டறிய, ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. ஆனால் தனிநபர் பொறுப்புக்களைக் கண்டறியவோ, இராணுவ அதிகாரிகளை விசாரிக்கவோ அதை அனுமதிக்கவில்லை. தளபதி தபார் தமது கருத்தைக் கூற மறுத்துவிட்டார். கௌல், பலித் போன்றவர்களின் அறிக்கைகள் விசாரணைக் கமிஷனிடம் இருந்து மறைக்கப்பட்டது. நேரு, தபார், சென் கௌல் ஆகியோரது போர்க் குற்றங்களை விசரணைக் கமிஷன் சுட்டிக்காட்டியதா[ல்] அதன் அறிக்கை இரகசியமானதென்று கூற[ி] அமுக்கப்பட்டது.

இழிவான தோல்வியில் நாட்டைத் த



போர் முனையில் இராணுவ வீரர்களிடம் போர் வெறியைத் தூண்டும் 'சமாதான சிற்பி' நேரு.

படிப்பகம்

ளிய நேரு பதவிவிலகவோ, பொறுப்பை ஏற்கவோ முன்வரவில்லை. அவசர கால நிலை அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்ப்பாளர்களை ஒடுக்கினார். அதன்பிறகு சோசலிச சவடால்களை கூட நிறுத்திக் கொண்டு கம்யூனிசத்தைச் சாடுவதில் இறங்கினார். ஆனால் நேருவின் செல்வாக்கு வீழ்ச்சி அடையத் தொடங்கியது. காங்கிரசின் ஏக போக ஆட்சிக்கு முடிவு நெருங்கியது. அதைத் தூக்கி நிறுத்தவே மூத்த தலைவர்கள் பதவி விலகுவது என்ற ''காமராஜர்திட்டம்'' கொண்டு வந்து, நேருவின் 'எதிரிகளை'த் துரத்தினர்.

போருக்குப் பிறகு ஆக்கிரமிப்புப் பகுதியில் இருந்து சீனர்களை விரட்டுவது பற்றி அவ்வப்போது பேசினாலும், ''முன்னேறும் கொள்கை'' போன்ற வீபரீதமான முயற்சிகள் எதிலும் இந்தியா ஈடுபடவில்லை. இராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்வதோடும் அடிக்கடி சவால் விடுவதோடும் நிறுத்திக் கொண்டது. பம்பாய் முதலிய துணைத்தூதகரங்களை மூடும்படி உத்திரவிட்டதோடு, சீனத்தூதரகத்துக்கு வெளிக்காவல் போட்டது. எல்லையில் போருக்கு முந்திய நிலைமையே நீடிக்கிறது. எப்போதாவது பேச்சுவார்த்தை பற்றி இந்தியத் தலைவர்கள் பேச்சு எடுத்தாலே போதும், அரசியல் தலைவர்களிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்புவதும் ''நமது நலன்களைப் பலியிட மாட்டோம்'' என்று அரசு பல்டி அடிப்பதும் வாடிக்கையானது. சீனத்திலே மாவோ, சௌ என் லாய் ஆகியோர் மறைவுக்குப் பிறகுதெங்சியாவோ பிங் தலைமையிலான திருத்தல்வாதக் கும்பல் கட்சி மற்றும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. சோசலிச சீனம், முதலாளித்துவ நாடானது. இந்த மாற்றங்களைச் சாதகமாக்கிக் கொண்டு எல்லைப் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தைக்கு இந்திய அரசு முன் வந்துள்ளது. அதற்கான ஆய்வுக் குழுவை இரு அரசுகளும் அமைத்துள்ளன.

இந்திய - சீன எல்லைத் தகராறு பற்றிய பல உண்மைகள் இந்த நாட்டு வரலாற்றின் இருண்ட பக்கங்களிலே புதைந்து கிடக்கின்றன. பஞ்சசீலக் கொள்கைகளிலே புதைந்து கிடக்கின்றன. பஞ்சசீலக் கொள்கையின் பிதாமகன், நடுநிலை நாயகன், சமாதான சிற்பி என்று ஓயாது பிரச்சாரம் செய்யப்படும் ஒரு பரம்பரையின் விரிவாக்க - ஆக்கிரமிப்பு -மேலாதிக்க ஆசைகள் அவற்றிலே தெளிவாகத் தெரிகின்றன. இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகள் மறைக்கப்படுவதால் தான் அண்டை நாடுகளுக்கு எதிராக தேசிய வெறியையும் பகைமையையும் தூண்டி தொடர்ந்து ஆதாயம் அடைய முடிகிறது. பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை மாலத்தீவு, கடைசியாக நேபாளம் வரை விரிவாக்க - ஆக்கிரமிப்பு - மேலாதிக்க நடவடிக்கைகள் நீடிக்கின்றன. இந்த நாட்டு மக்கள் அறியாமல், இந்த நாட்டு மக்களின் நலன்களுக்கு விரோதமான விரிவாக்க -ஆக்கிரமிப்பு - ஆதிக்க வெறியை முறியடிக்க வேண்டுமானால் இப்படிப்பட்ட உண்மைகளை அஞ்சாது வெளிக் கொணர வேண்டும்.

(முற்றும்)

— மணி



# பள்ளிச் சிறுமியைக் கற்பழித்த காமவெறி ஆசிரியன்

உளழல் மன்னர்கள், ரௌடிகள், பெண் பித்தர்கள் முதலானோரின் திருவிளையாடல்களைத் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு, நெஞ்சைக் கனலாக்கும் நிகழ்ச்சியொன்று கறம்பக்குடி ஒன்றிய பள்ளியொன்றில் நடந்துள்ளது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று எழுத்தறிவிக்கும் ஆசானாக பசுத்தோல் போர்த்திய காமவெறிபிடித்த மிருகம் செய்த அடாவடித்தனத்தைத் தான் இங்கே குறிப்பிடுகிறோம். கறம்பக்குடி ஒன்றியம் மைலான் கோன்பட்டி (கோனார் தெரு) பள்ளியில் ஆசிரியன் ஒருவன் தன் கேவலமான இச்சையைப் போக்கிக் கொள்ள அப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் சிறுமியைக் கற்பழித்துள்ளான்!

இவன், கழிசடை காங்கிரசுக் கட்சியின் தமிழ் மாநில சிறப்புப் பேச்சாளர்களில் ஒருவன். காங்கிரஸ் சார்பு ஆசிரியர் பேரவையின் மாநிலத் துணைத் தலைவன். ஆபாசச் சிறப்புப் பேச்சாளன். காமக் களிவெறியாட்டங்களில் வலம் வருவதாலோ என்னவோ, மாரிக்கண்ணு என்னும் பெயருடைய இவன் ''கண்ணன்'' என்னும் புனைபெயரில் திரிகிறான்.

43 வயதான, நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான இந்த காமக் கண்ணன் இதே பள்ளியில் ஏற்கனவே மூன்று சிறுமிகளைக் கற்பழித்துள்ளான். இதை அக்கிராம மக்களே உறுதிப்படுத்துகின்றனர். ஒருமுறை, ஒரு சிறுமி (வேளார் மகள்) கற்பழிக்கப்பட்ட செய்தியை அறிந்து கிராம இளைஞர்கள் திரண்டு சென்று இவனைப் பிடித்து அடித்திருக்கிறார்கள். இவன் ஆடிய நாடகத்தைக் கண்டு ஊர் பெரியவர்கள் இளைஞர்களை சமரசப்படுத்தி அனுப்பினர். ஆனாலும் இவன் மாறவேயில்லை.

கடந்த 24.3.89 அன்று மாலை 4.30 மணியளவில் அப்பள்ளியின் சத்துணவு அறையில் இவன் பருப்புகளை வாரி கீழே இறைத்துவிட்டு, சுசீலா என்ற சிறுமியை அழைத்து அறையைக் கூட்டச் சொல்லியிருக்கிறான். வஞ்ச மற்ற அப்பிஞ்சு மாணவி அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த போது கதவை மூடி, சிறுமியின் வாயைக் கைக் குட்டையால் அமுக்கி மிருகத்தனமாக கற்பழித்துள்ளான். சிறுமி துடிதுடித்திருக்கிறாள். ரத்தம் பீறிட்டு வழிந்திருக்கிறது. வேதனை தாங்காமல் அழுத அச்சிறுமியை மிரட்டி அழுகையை நிறுத்தி, கால்களில் வழிந்த ரத்தத்தைத் தன் கைக்குட்டையால் துடைத்ததோடு சுவற்றிலும் தடவியுள்ளான். இப்போது அக்கறைகளின் மீது சாணம் மெழுகப்பட்டுள்ளது.

அச்சிறுமி தன் வீட்டிற்குச் சென்று வேதனை தாங்காமல் அழுது, நடந்ததைக் கூறியதும் சிலர் ஓடிவந்து இக்காமவெறியனைத் தேடியிருக்கிறார்கள். அதற்குள் இவன் தப்பியோடிவிட்டான். மறுநாள் பள்ளிக்கு வந்த இவனை பெற்றோர்கள் மடக்கியதும் ''உங்களால் ஆனதைச் செய்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு ஓடிவிட்டான்.

மைலான்கோன் பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் இது குறித்து கறம்பக்குடி போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தும் கூட இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவன் மந்திரி சிதம்பரம் வீட்டில் பாதுகாப்பாக இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். ''எமது சரகத்துக்குள் ஆள் இல்லை; வந்ததும் கைது செய்வோம்'' என்று நழுவிக்கொள்கிறது நயவஞ்சக போலீஸ் துறை. அப்பள்ளியில் பணியாற்றும் இதர ஆசிரியர்கள் இக்காம வெறியனைச் சாடும் அதேசமயம், இவன் காங்கிரசுக் கட்சிக்காரன் என்பதால் தமக்கு பிரச்சினை வருமோ என்று அஞ்சுகின்றனர். கல்வி நிர்வாகமோ ஏ.ஈ.ஓ-வை அனுப்பி நேரடி விசாரணை நடத்தியது. ஆனால் அவர் மக்களிடம் ''நாளை பிரச்சினை வந்தால் நீங்கள் உறுதியாக நிற்பீர்களா?'' என்று உத்திரவாதம் கேட்கிறார்.

ஆசிரியத் தொழிலுக்கே களங்க மேற்படுத்திய இக்காம வெறியனை உடனடியாக வேலை நீக்கம் செய்ய வேண்டும்; அவனைக் கைது செய்து உரிய தண்டனையளிக்க வேண்டும்; ஊர் மக்கள் முன் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்; இதை வலியுறுத்தி கிராம மக்களும் ஆசிரியர்களும் அஞ்சாமல் போராட முன் வரவேண்டும் என்று தகவல் சேகரிக்கச் சென்ற நாங்கள் அக்கிராம மக்களிடம் தைரிய மூட்டி, உங்கள் போராட்டத்திற்கு என்றும் நாங்கள் துணை நிற்போம் என்று உறுதியளித்து விட்டு சிறுமி சுசீலாவின் நினைவாக கனத்த இதயத்துடன் திரும்பினோம்.

தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, கறம்பக்குடி ஒன்றியம்.

www.padippakam.com



"சிங்கப்பூர் சிறையில் நான் பட்ட சித்திரவதையால் என் காதுகள் இன்னமும் வலிக்கின்றது" என்கிறார் மணிமொழி. மொட்டையடித்து, சிங்கப்பூரிலிருந்து திருப்பியனுப்பப் பட்ட தமிழர்கள்.

# வெளிநாடு சென்றும் தீரவில்லை அவலம்

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் என்ற சலுகையின் கீழ் ரகசிய உலக கிரிமினல்கள், இந்திய கறுப்புப்பண முதலாளிகளின் பினாமிகள் ஏகாதிபத்திய நிறுவனங்களின் ஏஜென்ட்டுகள் முதலானோர் இந்தியாவில் முதலீடு செய்து இந்தியச் செல்வங்களை அற்பக் கூலி கொடுத்து சுரண்டிச் செல்கின்றனர்.

மறுபுறமோ, இந்திய தாய்த்திருநாட்டின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தங்கள் உதிரத்தையும் வேர்வையையும் கொட்டிய உழைப்பாளி மக்கள், சொந்த மண்ணில் உழைத்து வாழவும் வழியில்லாமல் தங்கள் ரத்தத்தை விற்க அந்நிய நாடுகளுக்கு இடம் பெயர்கின்றனர்.

சொந்த மண்ணில் அற்ப உடமைகளை விற்று, ஊரைப் பிரிந்து, உறவைப் பிரிந்து, வாழ்வைத் தேடி அந்நிய நாடுகளுக்கு நாடோடிகளாகச் சென்றவர்கள் அங்கும் அந்நிய நாட்டு அரசாங்கங்களால் அவமானப்படுத்தப்பட்டு அடக்குமுறைகளுக்கு ஆளாகி, பந்தாடப்படுகிறார்கள்.

கடந்த மே மாதம் முதல் வாரத்தில் மட்டும் சிங்கப்பூரிலிருந்து இவ்வாறு சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று மூன்று தவணைகளில் 268 தமிழர்கள் குற்றவாளிகளாக இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இன்னும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிங்கப்பூர் அரசாங்கத்தால் சிறை பிடிக்கப்பட்டு, இந்தியாவுக்கு அனுப்புவதற்காக அகதிகள் முகாமில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள்.

வெறும் 15 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகக்கூடிய சுற்றுலா "விசா"வின் மூலம் சிங்கப்பூர் சென்று, சட்ட விரோதமாக நிரந்தரமாக தங்கிவிட்டவர்கள், இவர்கள்.

இதில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் மட்டுமே கள்ளக் கடத்தல்காரர்களின் கைப் பொம்மைகளாக இயங்கியவர்கள். நூற்றுக்கணக்கானவர்கள் உண்மையில் பிழைப்பு தேடிப் போனவர்கள்.

தேடிப்போன சுதந்திரமும் சுகபோகமும் இங்கு மாதிரிதான். அங்கேயும் வேலி போட்டு பாதுகாக்கப்படுவதை, அதற்குள்ளே சிறு கூட்டமும், வெளியே போண்டியாக பெருந்திரளான உழைப்பாளி மக்களும் உழன்றுக் கொண்டிருப்பதைக் கண்டவர்கள். இருந்தும் அதை யாரிடமும் சொல்ல வழியின்றி, வெறுங்கையுடன் ஊர் திரும்பவும் மனமின்றி, கிடைத்தது லாபமென உதிரி வேலைகளில் சேர்ந்தவர்கள்.

சிற்றுண்டி விடுதியில் சர்வர்களாக, கட்டிட வேலைகளுக்கு உதவும் கூலிகளாக முதலாளிகளின் அரண்மனை பங்களாக்களை சுத்தம் செய்பவர்களாக, அவர்களின் அந்தப்புர தோட்டங்களை அழகுபடுத்துபவர்களாக 'பேன்ட்' போட்ட அடுப்பங்கரை ஊழியர்களாக, கூப்பிட்ட குரலுக்கு முன்னாள் நிற்கும் எடுபிடிகளாக, சில வெள்ளிகளுக்காக சொல்லி முடியாத வேதனைகளை அனுபவித்தவர்கள். இவர்களைப் போன்றவர்களால் உழைப்புக்கான இடத்தில் குடியிருப்புகளை வாடகைக்கு எடுப்பது என்பது நினைத்துப் பார்க்கவும் முடியாது. பல மைல்களுக்கு அப்பால் வாடகைக்கு எடுத்திருக்கும் தமது சேரிகளுக்கு வரவேண்டும். சிறு அறையில், பலபேர் கூட்டாக பொங்கித் தின்று வாழ வேண்டும். இல்லையானால் மானத்தைவிட்டு, பிளாட்பாரங்களில், பூங்காக்களில், பொது இடங்களில் படுக்க வேண்டும்; உணவுக்கு நடைபாதை கடைகளைத் தான் நாடவேண்டும். அவல வாழ்வு மட்டுமல்ல; அடக்குமுறையும் கத்திபோல் எப்போதும் தலைமேல் தொங்கிக் கொண்டிருக்கும்.

பணியிடத்தில் அநியாயமாக பழி வாங்கப்பட்டால், நியாயத்தைக் கேட்க துணிந்து நின்றால், சட்டவிரோதமாக குடியேறியிருப்பதைச் சுட்டிக்காட்டி மிரட்டுவார்கள்.

சிங்கப்பூரிலிருந்து குற்றவாளிகளாக நாடு திரும்பியவர்கள் கூட இவ்வாறு அடக்கு முறைக்கு மத்தியில் அவல வாழ்வு வாழ்ந்தவர்கள். இதிலொருவர், தஞ்சை தென்பாதி கிராமத்தைச் சேர்ந்த குமார் என்ற இளைஞர். சிங்கப்பூர் ஷாங்கி விமான நிலையத்தில் கட்டிடக் கூலியாக வேலை பார்த்தவர். "அங்கு வேலைசெய்த 23 நாட்களுக்கு அவர்கள் ஒரு பைசாக்கூட சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்கள்" என்று வேதனையோடு கூறுகிறார். கடைசியில் அதற்கும் வழியில்லாமல் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டு வீடுவந்து சேர்ந்திருக்கிறார்.

சென்ற ஆண்டு துவக்கத்தில் சென்ற இவர்கள், முழுமையாக 2 மாதம்கூட அங்கு பணிபுரியவில்லை. அதற்குள்ளேயே அங்குள்ள போலீசால் கண்டறியப்பட்டு கடந்த ஓராண்டுக்கு மேலாக சிறையில் வதை பட்டிருக்கிறார்கள். 4 பேர் மட்டுமே தங்கக்கூடிய சிறைக் கொட்டடிகளில் 40க்கும் மேற்பட்டவர்களை அடைத்தும், 2 நிமிட நேரத்தில் காலைக்கடன்களை முடிக்க நிர்பந்தித்தும், அதிக நேரம் எடுத்து கொண்டவுர்களை தண்டித்தும் ரசித்திருக்கிறது, சிங்கப்பூர் போலீசு. அனுப்பும் போது அனைவரின் தலையையும் மொட்டையடித்து அவமானப்படுத்தியது. இந்த இடைப்பட்ட நாட்களில், இவர்கள் பல முறை இந்திய தூதரக அதிகாரிகளுக்கு குரல் கொடுத்து, மனுக்கொடுத்து பார்த்தார்கள். அதிகாரிகள், செவி சாய்க்கவில்லை. கடைசியில், சிங்கப்பூர் அரசாங்கமே நேரடியாக நிர்பந்தித்ததன் பேரில் இந்திய அரசாங்கம் இவர்களை இலவசமாக விமானத்தில் ஏற்றிவந்து சென்னையில் விட்டதுடன் கை கழுவிக் கொண்டது.

இவர்கள் அனைவருமே இளைஞர்கள். குறிப்பாக, தமிழ்நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலோர் விவசாயக் குடும்பத்தை பின்னணியாகக் கொண்டவர்கள். தொடர்ந்து பல ஆண்டு வறட்சியால் முற்றிலுமாக போண்டியாகிப் போன விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிழைப்புக்கு வழியில்லாமல் கூலி ஏழை விவசாயிகள், நகர்ப்புறத்தை நோக்கி படையெடுக்க பலர் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை தொழிலாகக் கொண்டார்கள். சிறிது வசதியுடைய இவர்களைப் போன்ற நடுத்தர விவசாய வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள், சட்டவிரோதமாக அந்நிய நாடுகளுக்குப் படையெடுத்தார்கள்.

தம் உழைப்பால், தம் மனைவிக்கும் தாய் தந்தையருக்கும், சகோதரிகளுக்கும் எதைஎதையோ வாங்கிவர கோட்டைக் கட்டியவர்கள், கடைசியில் சென்னையிலிருந்து வீடு திரும்ப பயணச் செலவுக்குக்கூட காசு இல்லாமல், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் வெளிப்புறத்தில், கையில் எடுத்துவந்திருந்த சோப்பு கட்டிகளையும்

படிப்பகம்

www.padippakam.com

வைத்திருந்த ஒன்றிரண்டு சட்டைகளையும் வந்த விலைக்கு விற்கு, ஊர் போய் சேர்ந் தார்கள்.

இவ்வாறு பிழைப்பைத் தேடி சட்டவி ரோதமாக அந்நிய நாடுகளுக்கு குடியேறும் அவலம் இந்தியாவில் மட்டுமல்ல. மூன்றாம் உலக நாடுகளின் முக்கிய பகுதியான ஆசியா முழுவதும் பரவியிருக்கிறது. குறிப் பாக, தெற்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளி லிருந்து மட்டும் சுமார் 50 லட்சம் உழைப்பா ளிகள், இவ்வாறு வேலை தேடி அந்நிய நாடு களில் உழலுகின்றனர். இவர்களில் பெரும் பாலோர் சட்டவிரோதமான முறையில் குடி பெயர்ந்தவர்கள். வறிய, மற்றும் நடுத்தர வர்க்க அடிமட்ட உழைப்பாளிகள். இவர்களின் உழைப்பைச் சுரண்டி வாழும் நாடுகளில் பிரதான இடம் வகிக்கிறது அரபு வளைகுடா நாடுகள்! ஹாங்காங், சிங்கப் பூர், தைவான், ஜப்பான், மே.ஜெர்மனி போன்ற நாடுகளும் கணிசமான அளவில் இவர்களின் உழைப்பைச் சுரண்டி வாழ்கின் றன.

தங்களுடைய வாழ்வுக்கும், வளர்ச்சிக் கும் எப்போதெல்லாம் பெருந்திரளான உழைப்பாளி மக்கள் தேவைப்படுகிறார் களோ அப்போதெல்லாம் இந்நாடுகள் சட்ட விரோதமான முறையில் குடியேறியவர்க ளைப் பற்றி கண்டுக் கொள்ளாமல் கண்ணை மூடிக் கொள்கிறது; சட்டபூர்வமான சலுகை களும், அதிகப்படியான கூலியையும் இவர் கள் கோருவதில்லை என்பதால் மறைமுக மாக அவர்களை வரவேற்கவும் செய்கின் றன. தேவையில்லாத போது சொந்த நாட்டு சட்டங்களைக் காட்டி பல குற்றங்களை சுமத்தி பெருந்திரளாக வெளியேற்றுகின் றன. இதனால், அடிமட்டக் கூலிக்கு தேர்ச்சி யாளர்களை பொறுக்கியெடுத்துக் கொள்வ தும் அந்நாடுகளுக்கு சுலபமாக இருக்கிறது. சமீபத்தில், அரபு நாடுகளில் மட்டும் இவ் வாறு அந்நிய நாட்டு தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான சலுகைகளும், சம்பளங்க ளும் 23 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

அரபு மற்றும் ஹாங்காங், சிங்கப்பூர், தைவான் போன்ற நாடுகளில் இனிமேலும் நிர்மாண வேலைகள் இல்லையென்ற அள வுக்கு, வானாளாவிய உயர்ந்த கட்டிடங்க ளும், பூதாகரமான தொழிற்சாலை நிர்மாண வேலைகளும் முடிந்துவிட்டன. தேர்ச்சிபெ றாத தலை சுமை, உடலுழைப்பு தொழிலா ளர்களும், ஆரம்ப தொழிற்கல்வி பயின்ற அரைகுறை தேர்ச்சிப் பெற்ற தொழிலாளர்க ளும் இனிமேலும் அவர்களுக்கு தேவை யில்லை. கட்டிட வேலைக்குத் தேவையான வர்கள் இடத்தில் இப்பொழுது கம்ப்யூட்டர் இயக்குநர்கள் தேவைப்படுகிறார்கள். வெறும் தொழிற்கல்வி கற்ற தொழிலாளர் கள் இடத்தில் இப்பொழுது தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படுகிறார்கள். வியா பார ரீதியாக கட்டப்பட்டுள்ள ஐந்து நட்சத் திர மருத்துவமனைகளுக்கு தேர்ச்சிபெற்ற மருத்துவர்களும் அழகான தாதியர்களும் தேவைப்படுகிறார்கள். எனவே இதுநாள் வரையில், அந்நாட்டின் நிர்மாண வேலைக ளுக்கு ரத்தத்தையும் வேர்வையும் கொட் டிய தொழிலாளர்கள் நயவஞ்சகமான முறையில் திரள்திரளாக வெளியேற்றப்படு கிறார்கள்.




**பிழைப்பு தேடி வெளிநாடு சென்றோ ரின் எண்ணிக்கை.** (பத்தாயிரங்க ளில்)

ஆசிய நாடுகளிலிருந்து குறிப்பாக, பாகிஸ்தான், வங்கதேசம், இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், தென் கொரியா போன்ற தொழில் வளர்ச்சியற்ற வறிய பின் தங்கிய மூன்றாம் உலக நாடுகளிலிருந்து சென்ற தொழிலாளர்களில் சுமார் 3,90,000 பேர் இவ்வாறு சமீப காலங்களில் வெளி யேற்றப்பட்டுள்ளனர். சமீப காலங்களில், ஹாங்காங் நகரத்திற்கு வந்து கட்டிட வேலை செய்து வந்த சீனர்களும் இதில் அடக்கம்.

வேலைவாங்கி தருவதாக, போலி நிறு வனங்களால் ஏமாற்றப்பட்டு உள்நாட்டி லேயே திருப்பியனுப்பப்பட்டவர்கள், வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப் பட்டு அங்கு ஏமாற்றப்பட்டு, ஊர்திரும்ப வும் காசு இல்லாமல், அங்கேயே விபச்சாரிக ளாகிவிட்ட தாய்மார்கள் சகோதரிகள், வீட்டு வேலைகளுக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள முதலாளிகளின் காம வெறிக்கு பலியாக்கப்பட்டு திருப்பிய னுப்பப்பட்டவர்கள், இதனால் அற்ப உட மைகளையும் இழந்து குடும்பமும் சீர்கு லைந்து மனநோயாளிகளாகிப் போனவர் கள், இந்நாடுகளில் ஏராளம். பிலிப்பைன்ஸ் நாட்டில் அரசு அங்கீகாரம் பெற்ற 800 வேலை வாய்ப்பு நிறுவனங்களில் 100க்கும் மேற்பட்டவைகள் இவ்வாறான கிரிமினல் குற்றங்களால் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இந்தியாவில், கேரள மாநி லத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட கிருத்துவ மற்றும் முஸ்லீம் பெண்கள் வெளி நாடுகளில் இவ்வாறான கொடுமைகளுக்கு ஆளானது, இரண்டாண்டுகளுக்கு முன் இங்கு கதைகதையாய் வெளியானது. மனித தன்மையற்ற முறையில் நடத் தப்படுவதற்கு எதிராக எந்த எதிர்ப்பும் தெரி விக்காத அரசாங்கங்கள், இத்தொ ழிலாளர்களின் உழைப்பிலிருந்து வரும் அந்நிய செலாவணியை மட்டும் வெட்கங் கெட்ட முறையில் உறிஞ்சிக் கொழுக்கின் றன.

கடந்த 10 ஆண்டுகளில் அந்நிய நாடுக ளில் பணிபுரியும் தொழிலாளர்களால் பாகிஸ்தானுக்குள் வந்த பணம் மட்டும் 16 பில்லியன் டாலர். ஆண்டு ஒன்றுக்கு வங்க தேசத்துக்கு வரும் பணம் 610 மில்லியன் டாலர். பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு வரும் பணம் 950 மில்லியன் டாலர். இத்தொகை கள், அந்நாடுகளின் மொத்த தேசிய வருமா னத்தில் ஏறக்குறைய 5 சதம். அந்நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகத்தால் கிடைக்கும் வருமா னத்தில் நான்கில் ஒரு பங்குக்கு சமம். இந்தி யாவுக்கு வரும் பணத்தின் மதிப்பு விபரம் கிடைக்கவில்லை.

குடியேறிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும், சொந்த நாட்டின் அரிய அந்நிய செலவாணி தேவைக்கு எறும்பாகவும் உழைக்கும் அவ் வுழைப்பாளிகளின் வாழ்க்கையோ ஆழ மான சோகமானது. அவர்களுடைய நியாய மான சிறுசிறு பாச உணர்வுகள், குடும்ப உற வுகள்கூட அறுபட்டு கிடக்கிறது. கடல்க டந்து சென்றிருக்கும் அவர்கள் குடும்பங்க ளில் எதிர்பாராமல் ஒரு மரணம் நடந்தால் கூட இவர்களால் நினைத்த நேரத்தில் வந்து போக முடியாது; பல மாதங்கள் குருவி மாதிரி சேகரித்த பணம் பயணச் செலவி லேயே கரைந்து விடும். அப்படியே வந்தா லும் திரும்பவும் வேலைக்கு உத்திரவாதம் கிடையாது.

16 ஆம் நூற்றாண்டு இறுதியில் இந்தி யாவுக்கு வந்த பரங்கியர்கள், நிர்பந்தப்ப டுத்தி இந்திய தொழிலாளர்களை இலங்கை யின் தோட்ட தொழிலுக்கும், ஆப்பிரிக்க காலனிகளில் ரயில்தடம் அமைக்கவும், சுரங்கத் தொழிலுக்கும் கூலிகளாக இழுத்துச் சென்றார்கள். அமெரிக்க யுத்தவெறியர்கள், தங்கத்தைக் காட்டி வியட்நாம் ஆக்கிரமிப்பு போருக்கு கூலிப்படைகளை திரட்டினார் கள். ஆனால் இன்றோ, உள்நாட்டு ஆளும் வர்க்க கும்பல், அதே கொடுமையை நூதன மான முறையில் அரங்கேற்றுகிறது. சொந்த நாட்டில் வறுமை, வேலையில்லா திண்டாட் டத்தை தீராத நோயாக்கி, அந்நிய மோகத்தை ஆறாகப் பெருகவிட்டு சொந்த நாட்டு மக்களை அந்நிய நாட்டு எஜமானர்க ளுக்கு அடிமைகளாக துரத்துகிறது.

● பச்சையப்பன்.

www.padippakam.com



இந்துஜா சகோதரர்களுடன் ராம்நிவாஸ் மிர்தா, ரஸ்கோத்ரா.



கமல் தண்டோனாவுடன் புஷ் குடும்பத்தினர்.

# விருந்து விபச்சாரம் - லஞ்சம் : அரசியல்வாதிகளின் அந்தரங்க வாழ்க்கை

அரசியல்வாதிகள், குறிப்பாக ஆட்சியில் இருப்பவர்கள் கள்ளபேரங்கள், லஞ்ச ஊழல்கள், அதிகார முறைகேடுகளிலே ஈடுபடுகிறார்கள்; ஆடம்பர உல்லாச வாழ்க்கையிலே மிதக்கிறார்கள் என்பதுபோன்ற சங்கதிகள் இப்போது யாரும் அறியாத இரகசியமாக இல்லை. இருந்தாலும் எப்படி யார் யார் மூலம் அந்தக் குற்றங்களை செய்கிறார்கள்? எங்கே, யார் யாருடன் தமது இரகசிய வாழ்க்கையை நடத்துகிறார்கள்? இவைதான் இன்னமும் மிகச்சிலரே அறிந்த அந்தரங்கமாக உள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் துண்டுதுக்காணிகளாகவும், நீண்ட தனித்தனிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பத்திரிகைகளிலே வந்த செய்திகளை இணைத்து முடிச்சுப்போட்டுப்பார்க்கும் போது ஒரு பயங்கரமான சித்திரம் கிடைக்கிறது

- ★ நவீன ஆயுதத் தளவாடங்கள், தொழில்நுட்ப இரகசியங்கள், முதலீடுகள் ஆகியவற்றுக்காக பேரங்கள் நடத்துவதும், கடத்தி விற்பதும்.
- ★ சர்வதேச நிதி மற்றும் வங்கி மோசடிகள் செய்வது, சொத்துக்களை வாங்கி விற்பதிலே தில்லுமுல்லுகள் செய்வது.
- ★ இதற்காக பணம், பெண் மற்றும் உல்லாச கேளிக்கைகளை ஏற்பாடு செய்து பெரு முதலாளிகள், சர்வதேசத் தலைவர்களை வீழ்த்துவது.

—மேற்கண்டவற்றையே தொழிலாகக் கொண்ட பல சர்வதேசக் கிரிமினல் கும்பல்கள் உள்ளன. அவற்றுடன் நெருக்கமாக உறவு கொண்டுதான் இந்த நாட்டு அரசியல்வாதிகள், குறிப்பாக ஆட்சியில் இருப்பவர்கள், கள்ளபேரங்கள், லஞ்ச ஊழல்கள், அதிகார முறைகேடுகள் மற்றும் ஆடம்பர உல்லாச கேளிக்கைகளிலே ஈடுபட்டு இரகசிய வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த உண்மைகளைக் கொண்ட சித்திரம்தான் இங்கே தரப்படுகிறது.

கஷோகி - ஆர்டுபோ - சந்திராசாமி



''திருவாளர் பரிசுத்தம்'' என்ற பட்டயம் கட்டிக் கொண்டு உயர உயர பறந்தார் ராஜீவ். அவரைத் தரையில் இழுத்துப் போட்டது போஃபோர்ஸ் பீரங்கி பேர ஊழல் அம்பலமான போதுதான். ஆயுத பேரத்தரகன் வின்சத்தாவின் ஸ்வென்ஸ் கா, தரகு முதலாளிகள் இந்துஜா சகோதரர்களின் பிட்கோ, பனாமா போதை மருந்து கும்பல்களின் ஏ.இ.சர்வீஸஸ் ஆகிய மூன்று நிறுவனங்கள் ராஜீவின் சார்பாக லஞ்சத்தை வாங்கியவை. இந்த பேரத்தில் இந்துஜாக்களின் உறவை ''இந்து'' பத்திரிக்கையின் ஆவணங்கள் நிருபித்தன.

நெருங்கிய நண்பர்கள் - கூட்டாளிகளுக்கு ஆடம்பர உல்லாச விருந்துகள் நடத்தி உயர்ந்த பரிசுகள் தருவதில் பிரபலமானவர்கள் இந்துஜாக்கள். இங்கிலாந்து நாட்டு பிரபுக்கள், மந்திரிகள், ராணியின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். சென்ற ஆண்டு இந்துஜாக்கள் நடத்திய தீபாவளி விருந்துக்கு ராஜீவின் பிரதிநிதிகளாக மத்திய மந்திரி நரசிம்மராவ், அலெக்சாந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு மத்தியத் துணி மந்திரி ராம்நிவாஸ் மிர்தாவும், இந்தியத் தூதர் ரஸ்கோத்ராவும் அனுப்பப்பட்டனர். ஆதாரம் இருந்தும் இந்துஜாக்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஒரு பத்திரிக்கையாளர் கேட்டபோது, ''இந்துஜாக்கள் அமெரிக்க அதிபர் ஜியார்ஜ் புஷ்க்கு நெருக்கமானவர்கள். இந்திய - அமெரிக்க உறவை வளர்ப்பதற்கு உதவுகிறார்கள்'' என்றார், ராஜீவ். அமெரிக்க அதி

படிப்பகம்

www.padippakam.com

பர் புஷின் மகன், மனைவியோடு இந்துஜாக்களின் விருந்தில் கலந்து கொண்டார்.

லஞ்சம் வாங்கிய வங்கிக் கணக்கு மட்டுமல்ல, போஃபோர்ஸ் கம்பெனியின் அந்நாள் சேர்மன் மார்ட்டின் ஆர்டுபோ டைரியும் ஆதாரமாக உள்ளது. ஊழல் அம்பலமான பிறகு அதை சமாளிப்பதற்காக ஆர்டுபோவும் இந்துஜாக்களும் கூடி சதி செய்ததை டைரி நிரூபிக்கிறது. ராஜீவுடன் அவர்களுக்குள்ள உறவையும், அருண்நேரு, தரகு முதலாளி சுவராஜ்பால், வங்கி மோசடிப் பேர்வழி ராஜீவ் சேத்தியா ஆகியோர் எதிரிகள் என்றும் ஆஃப்கான் முஜாகிதின், இரான் ஆகியவற்றோடு தொடர்பு உள்ளதையும் ஆர்டுபோவின் டைரி குறிப்பிடுகிறது. போஃபோர்ஸ் சேர்மனாக இருந்த மார்ட்டின் ஆர்டுபோ, சுவீடன் சட்டவிதிகளுக்கு விரோதமாக சிங்கப்பூர் மூலமாக தென் ஆஃபிரிகாவுக்கும், ஈரானுக்கும் ஆயுதங்களை விற்றவர். ஆயுத பேரத்தகராறு காரணமாக சுவீடன் பிரதமர் ஓலஃப் பாமே மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இந்த ஆர்டுபோவோடு ஆயுதத்தளவாட இரகசிய விற்பனை, கடத்தலில் ஈடுபடுபவர் சர்வதேச ஆயுத வியாபாரி ஆதனன் கஷோகி. அவருடைய தொழில் கூட்டாளி சர்வதேசக் கிரிமினல் சாமியார் சந்திராசாமி. கஷோகி - சந்திராசாமி கிரிமினல் குற்றக்கதைகள் தனியான புராணம் - பிறகு பார்ப்போம். உலகப் பெரும் பணக்காரர்களில் ஒருவரான புரூனி நாட்டு சுல்தானின் ஆலோசகர் பதவி வாங்கித் தருவதாகக் கூறி ஆர்டுபோவை இவர்கள் சந்தித்தனர். போஃபோர்ஸ் பேரங்கள் பற்றிய இரகசியங்களை இரகசியமாகப் பதிவு செய்து கொண்டதாகக் கூறுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள எதிர்த்தரப்பினரான கோயங்கா, அருண்நேரு, தேவிலால், சந்திரசேகர், ராம்ஜேத்மலானி, அரிஃப் முகமது கான், உன்னிகிருஷ்ணன், தாத்தா சமந்த், ஜெயில்சிங் ஆகிய அனைவரையும் வளைத்துப் போட்டார் சந்திராசாமி. போஃபோர்ஸ் ஊழலில் ராஜீவுக்கு நேரடி உறவுபற்றிய ஆதாரங்கள் இருப்பதாகவும், ராஜீவ் அரசைக் கவிழ்ப்பதாகவும், நம்பவைத்தார். 40 கோடி ரூபாய் கொடுத்து ராஜீவை கவிழ்த்து, தனது ஆளைப் பிரதமராக்கும்படி ஜெயில்சிங்குடன் பேரம் நடத்தினார். போதிய ஆதாரமின்றி இந்த சதி தோற்றுப்போனது. எதிர்த்தரப்புடன் கூடிக்குலாவியபோதே தனக்கு எதிரான பழைய வழக்குகளில் இருந்து விடுபட ராஜீவுடன் பேரம் பேசினார் சந்திராசாமி. அவரைக் கைது செய்து நிர்பந்தித்து கட்சிமாறச் செய்தார் ராஜீவ்.

எதிர்க்கட்சியினரிடையே பூசலை உருவாக்கும் ராஜீவின் சதியை ஏற்றுச் செயல்படுத்தினார், சந்திராசாமி. 16 எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது இரகசிய புலனாய்வு செய்வதற்காக ஃபார்ஃபாக்ஸ் மூலம் வி.பி.சிங் உத்தரவிட்டதாக அதன் தலைவரிடம் இருந்து கடிதம் வாங்கி சுப்பிரமணியம் சுவாமியிடம் கொடுத்து வெளியிட்டனர். இதற்காக வி.பி.சிங், - தேவிலால் - ஹெக்டேக்கு எதிரான சந்திரசேகர், சுப்பிரமணியம் சுவாமி, இந்துபாய் பட்டேல் ஆகியோர் ஃபார்ஃபாக்ஸ் தலைவர் ஹெர்ஷ்மானை சந்திப்பதற்கு ஆதனன் கஷோகி மூலம் ஏற்பாடு செய்தார். ஹெர்ஷ்மேன், இந்த கும்பலுக்கு எதிராகத் திரும்பியபோது சந்திராசாமி - ராஜீவ் - சந்திரசேகர் கும்பலின் சதி தோற்றுப்போனது.



கஷோகி - சந்திராசாமி - பாமீலாவுடன் அமெரிக்க செனட் சபாநாயகர் ஜிம்ரைட்.

ராஜீவோடு ஏர்-இந்தியா விமானியாக வேலைசெய்தவர் கமல் தண்டோனா. இப்போது அமெரிக்காவில் குடியேறி ராஜீவின் பினாமியாக அமெரிக்க சொத்துக்களைக் கவனிக்கிறார். அமெரிக்க அதிபர் ஜியார்ஜ் புஷ்ஷோடு நெருங்கிய நட்பு வளர்ப்பவர்! கடந்த செப்டம்பரில் கமல் தண்டோனாவை சந்திராசாமியும் எதிர்க்கட்சித் தலைவர் ஆரிஃப் முகமதுகானும் சந்தித்தனர்! விவரம் இரகசியமாகவே உள்ளது.

கடந்த நவம்பரில் டெல்லியில் பிறந்தநாள்விழா கொண்டாடினார், சந்திராசாமி. எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆரிஃப் முகமது கான், முலயம் சிங் யாதவ், சத்யபிரகாஷ் மாளவியா, சத்யபால் மாலிக், பைரோன் சிங் ஷெக்கேவாட், ஆளுங்கட்சி எம்.பி. துஷார் காந்தி கோஷ், விஷ்னு அரிடால் மியா ஆளுங்கட்சியின் ஐந்தாம்படை இந்துபாய் பட்டல், தேவகௌடா, சந்திரசேகர், சுப்பிரமணியம் சுவாமி ஆகிய சகலரும் கலந்து கொண்டனர்.

அதே நாளில் சந்திராசாமியின் ஒரு ஆன்மீக நிறுவனம் ஆதனன் கஷோகியின் மனைவி லாமியாவுக்கு சர்வதேசப் பெண்கள் மற்றும் சர்வதேச நலன்களுக்காகப் பாடுபடுவதற்காக சிறப்பு விருது வழங்கியது. சோனியா குடும்பத்தோடு குழந்தையாக இருந்தபோது பழகியவர் இந்த லாமியா. அப்படியே சென்னை வந்து தரகு முதலாளி ஒபுல்ரெட்டியின் கூட்டாளியும், அப்போலோ மருத்துவமனை சேர்மனுமான பிரதாபரெட்டியின் மகள் திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்தினார். அப்போலோ மருத்துவமனைக்கு பல லட்சம் ரூபாய் ஆதனன் கஷோகி அன்பளிப்பாகக் கொடுத்தார். சந்திராசாமியோடு நெருங்கிய தொடர்பு கொண்டது ஒபுல்ரெட்டி - பிரதாபரெட்டி கும்பல்.

அமிதாப்பச்சன், கமலஹாசன், ராஜ்பாபர், சினிமா முதலாளி ராமநாதன் உட்பட பல இந்திய சினிமாக்காரர்கள் சந்திராசாமியின் பக்தர்கள். ராமனாதன் மூலமாக சினிமாவில் முதலீடு செய்கிறது கஷோகி, சந்திராசாமி கும்பல். இந்திரா, சஞ்சய், மேனகா, நரசிம்மராவ், டெல்லி துணை கவர்னர் ரமேஷ் பண்டாரி ஆகிய உள்நாட்டுத் தலைவர்கள்; அமெரிக்க முன்னாள் அதிபர் நிக்சன், பிலிஃபைன்ஸ் முன்னாள் அதிபர் மார்கோஸ் - இமெல்டா, எகிஃப்து அதிபர் முபராக், லிபியாவின் கடாஃபி, ஜோர்டானின் உசைன் ஆகிய வெளிநாட்டுத் தலைவர்கள் - இப்

அப்போலோ பிரதாபரெட்டி மகள் திருமணத்தில் சந்திரா சாமி



கஷோகியின் மனைவி லாமியா.



படிப்பகம்

www.padippakam.com



சந்திராசாமியுடன் ராஜீவ்.

படி 177 நாடுகளின் 6070 பிரமுகர்களைத் தெரியும் என்கிறார் சந்திராசாமி. இது பொய்யாக இருக்காது என்பதற்கான ஆதாரங்கள் வெளிவரத் துவங்கியுள்ளன.

ஆயுத தளவாடங்கள், தொழில் நுட்பங்கள், சொத்துக்கள், நிதி-கடன்கள் ஆகிய வர்த்தகங்களில் சர்வதேசத் தரகன் ஆதனன் கஷோகி என்ற சௌதி நாட்டுக்காரன். இத்தாலிய மனைவி லாமியா, ரியாத் - நியூயார்க் - பாரிஸ், மார்பெலா போன்ற நகரங்களில் ஏராளமான சொத்துக்கள், ஆடம்பரக் கப்பல் விமானங்கள் இவனுக்கு உண்டு. பல கோடி ரூபாய் பரிசம், தொழில் லைசென்சுகளும் பெற்றுக் கொண்டு லிபியா அதிபர் கடாஃபிக்கு தனது மகளை மூன்றாவது மனைவியாக கடந்த ஆண்டு மணம் முடித்துக் கொடுத்தான்.

சந்திரா சாமியுடன் தேவிலால்



லஞ்சம், ஆடம்பர உல்லாச விருந்து, பெண்கள் ஆகியவற்றின் மூலம் பேரங்கள் நடத்துவதில் சந்திராசாமியின் கூட்டாளி ஆதனன் கஷோகி. சர்வதேசக் கிரிமினல் குற்றங்களுக்காக இந்தக் கும்பல் பயன்படுத்திய விபச்சாரிகளில் ஒருத்திதான் இப்போது பத்திரிகைகளில் பிரபலமாக அடிபடும் பாமிலா போர்டிஸ். இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த அலகாபாத் கும்பமேளாவுக்குக் கூட சந்திராசாமி கும்பலோடு வந்து முகாமிட்டிருந்தாள், பாமிலா. பிரபலமான பல தேசிய, சர்வதேசிய கிரிமினல் குற்றங்கள் - தில்லுமுல்லுகளில் சந்திராசாமி - கஷோகி கும்பல் ஈடுபட்டுள்ளது. தனது வாடிக்கையாளர்களான சர்வதேச பிரபலங்கள் தனது விபச்சாரிகளுடன் உள்ள ஆபாசப் படங்கள், இரகசிய உரையாடல்களைப் பதிவு செய்து கொண்டு அவர்களையே உருட்டி மிரட்டிப் பணம் பறிப்பது இந்தக் கும்பலின் தந்திரங்களில் ஒன்று.

உலகப் புகழ்பெற்ற லண்டன் ''ஹரோடுஸ்'' என்ற பல்பொருள் கடையை புருணியின் சுல்தானுடைய பினாமியான முகமது அல்ஃபாயின் பெயருக்கு வாங்கியது கஷோகி - சந்திராசாமி கும்பல். இந்தஃபாயிது கஷோகியின் சகோதரி கணவன். அறிவிக்காமல் பினாமியின் பெயரில் சொத்துக்களை வாங்குவது, இங்கிலாந்தில் குற்றமாகும். ராவ்லாண்ட் என்ற பிரிட்டிஷ்கார முதலாளிக்கு ''ஹரோடுஸ்''யை விற்பதைத் தடுத்து வந்த பிரிட்டிஷ் அரசு தாட்சரின் மகன் மார்க்தாட்சர் செல்வாக்கை வைத்து ஃபாயிதுக்கு விற்பதை அனுமதித்தது. காரணம், பல தொழில்களில் கஷோகி - சந்திராசாமி கும்பலுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார் மார்க் தாட்சர்.

அடுத்த பெரிய மோசடி ஈரான் - காண்ட்ரா ஊழல். நிகாராகுவா எதிர்ப்புரட்சிக் கும்பல் காண்ட்ரா. அதற்கு ஆயுத உதவி தருவதை அமெரிக்க நாடாளுமன்றம் தடுத்தபோது, பகைநாடான ஈரானுக்கு ஆயுதங்களை விற்று, அந்தத் தொகையைக் கொண்டு காண்ட்ராவுக்கு ஆயுதங்களை வாங்கித் தந்தது ரீகன் நிர்வாகம். இந்த இரகசிய ஊழலை பேரங்கள் நடத்தி முடித்துக் கொடுத்தது கஷோகி - சந்திராசாமி கும்பல்.

சர்வதேச தில்லுமுல்லுகளை செய்வதற்காக பாமிலா போர்டிஸ் போன்ற விபச்சாரிகளைப் பயன்படுத்தியது கஷோகி - சந்திராசாமி கும்பல். இப்போது பல ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக விசாரணையில் சிக்கியுள்ள அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் ஜிம்ரைட்டைக் கவருவதற்கு பாமிலா பயன்படுத்தப்பட்டாள். அரபு நாடுகளின் மன்னர்கள் - ஷேக்குகளை வளைத்துப் போடுவதற்காக, அவர்களுடைய அந்தப்புரங்களுக்கு அனுப்பப்பட்டாள். லிபியா அதிபர் கடாஃபியின் மைத்துனன், பிரிட்டிஷ் மந்திரிகள், எம்.பி.க்கள், பத்திரிக்கையாளர்களையும் தமது வலைக்குள் வீழ்த்தியது இந்தக் கும்பல்.

பிலிப்பைன்சின் முன்னாள் சர்வாதிகாரி மார்கோஸின் சொத்துக்களை வெளிநாடுகளில் பதுக்கி வைத்து, ஊழல்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்தார் கஷோகி. அதற்காகக் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு சுவிஸில் கைதாகி அமெரிக்காவுக்குக் கொண்டு செல்

படிப்பகம்

www.padippakam.com



நசீர் அலியுடன் அஜித்சிங், எஸ்.பி.மாளவியா, எஸ்.எஸ்.யாதவ்.



நசீர் அலியுடன் பிரதமர் ராஜீவ்.

லப்பட்டுள்ளார். ஆனால் சந்திராசாமிக்கும் இன்னமும் இங்கே மதிப்புக் கூடிக் கொண்டே போகிறது.

தவிடு இன்னும் ராஜாவுக்கு முறம்பிடிக் கும் மந்திரிகள் தானே இங்கு உள்ளனர். ராஜீ வின் ஊழல்களைக் கண்டு தைரியமடைந்த மந்திரிகள், சபாநாயகர் உட்பட பலரும் ஊழல்கள், அதிகார முறைகேடுகளில் தாரா ளமாக இறங்கி விட்டனர். ராஜீவின் போலீசு மந்திரி பூடாசிங் குடும்பத்தினர் 10 கோடி ரூபாய் சொத்துடைய ''எலிகண்ட் டிரா வல்ஸ்'' என்ற போக்குவரத்துத் தொழில் செய்கிறது. அரசுக்குச் சொந்தமான ''வாயு தூத்'' விமான சேவையின் ''காண்ட்ராக்ட்'' களை வளைத்துப் போட்டுக் கொள்கிறது. அக்கம்பெனியின் சேர்மன் ஹர்ஷ்வர்தனின் குடும்பத்தினர் இத்தொழிலில் கூட்டு சேர்ந் துள்ளனர். இக்கும்பல் விதிகளை மீறி ரூ.3 கோடி சொத்துள்ள ''ஆர்யவர்த்தா'' என்ற பிளைவுட் கம்பெனியை நலிவுற்றதென்று கூறிக் கபளீகரம் செய்ததோடு, ''ஷெராவர் வனஸ்பதி'' என்ற ரூ.6 கோடி மதிப்புள்ள ஆலைக்கு உரிமை பெற்றுள்ளது.

பலராம் ஜாக்கர், ஜான் பிராடியுடன் ராஜீவ்.




''பாரத விவசாயிகள் சங்கம்'' என்ற பெயரில் காங்கிரசின் சார்பாக ஒரு பெயர் பலகை அமைப்பை நடத்தி வருகிறார் நாடா ளுமன்ற சபாநாயகர் பலராம் ஜாக்கர். அதன் செயல் தலைவர் பிரபாகர ரெட்டி. இவர்களு டைய நண்பர், ஸ்பெயின் நாட்டுக்காரரான பிராடி. இவர்கள் கூட்டுச் சேர்ந்து நன் கொடை என்ற பெயரில் 3.6 கோடி ரூபாய் சுங்கவரி விலக்குப் பெற்று மாட்டுத் தீவன இயந்திரங்கள் 50ஐ இறக்குமதி செய்தனர். பிறகு அரசு வங்கிகளில் அவற்றையே அடகு வைத்து, கடன் வாங்கியதோடு, அரசு நிறுவனங்களுக்கே விற்றனர். அந்த இயந்தி ரங்கள் உற்பத்தி செய்த தீவனம் தகுதியற் றது. எனவே எங்குமே தீவன உற்பத்தி நடக் கவில்லை. சுங்க வரி விலக்கு வாங்கித்தந்த சபாநாயகர் பல மாநில முதல்வர்களுக்கு சிபாரிசு செய்ததோடு, கவர்னர் ஆட்சியில் அலெக்சாண்டரைப் பார்க்க சென்னை வந்து சிபாரிசு செய்தார் என்பதும் அம்பலமாகி யுள்ளது. இந்த மாட்டுத்தீவன விழாவில் ராஜீவ் கலந்து கொண்டு பிராடி - ஜாக்கர் கும் பலோடு கூடிக் குலாவினார்.

ராஜீவ் மீது அடுக்கடுக்கான ஊழல் குற் றச்சாட்டுகளைச் சொல்லும் எதிர்க்கட்சியி னர் கடத்தல்காரர்களின் கூட்டாளிகள் என்று ஆளுங்கட்சியினர் புகார் கூறினார்கள். அதை நிருபிப்பதற்காக ஜனதா தளத்தலை வர் அஜீத்சிங், அதன் உ.பி. தலைவர் சத்திய பிரகாஷ் மாளவியா, சத்தியபால்சிங் யாதவ் ஆகியோர் பிரபல போதை மருந்து கடத்தல் கார எம்.எல்.ஏ. நசீர் அலி கொடுத்த விருந் தில் கலந்து கொண்ட படத்தை வெளியிட்ட னர். அதேபோல நசீர் அலியின் விருந்தின ராக உ.பி. காங்கிரசு முன்னாள் முதல்வர் வீர் பகதுார்சிங், ஸ்ரீபத்மிஸ்ராவும், அவர்களின் தலைவர் ராஜீவும் விருந்துண்டு மகிழ்ந்த புகைப்படங்களை எதிர்க்கட்சியினர் வெளி யிட்டனர்.

தேசிய, சர்வதேசியப் பிரபலங்களா கப் பவனி வரும் இந்தப் பெரிய மனிதர்க ளின் யோக்கியதைகளைத்தான் மேற்கண்ட விவரங்கள் சொல்லுகின்றன. பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாடு ஒழுங்குடன் வளர்ந்த உறுதிமிக்க கட்சி மற்றும் தலைமையைத் தவிர உலகம் முழுவதும் இப்படி அழுகி நாறும் அரசியல் புள்ளிகளையே ஏகாதிபத் திய உலகம் உருவாக்குகிறது என்பதற்கு இவையே ஆதாரங்கள்.

படிப்பகம்

www.padippakam.com





வாஜ்பாய்

# இதுதான் இன்றைய இந்தியா

பாரத்பவன், இந்தியாவின் 9க்கும் மேற்பட்ட மிகப்பெரும் கலாச்சார மையங்களில் ஒன்று. காங்கிரசுக் கும்பல் அரசாளும் ம.பி.மாநிலம் போபால் நகரத்தில் 16 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. இந்தியாவின் பெருமைமிகு பல்வேறு இனம், மொழி, பண்பாட்டை தன்னகத்தே கொண்ட தொன்மை வாய்ந்த கலை - இலக்கியங்கள், மரபுவழி கிராமிய கலைகளை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம். ஆனால், மருந்துக்குக் கூட இதில் சம்மந்தப்பட்ட எவர் ஒருவரும் இதன் பொறுப்புகளில் இல்லை. ஆளும் காங்கிரசுக் கும்பலும் அதிகாரவர்க்கமும் தான் அதன் தலைவிதியை தீர்மானிக்கிறது.

லாட்டரிச்சீட்டு ஊழல் 'புகழ்', முன்னாள் முதல்வர் அர்ஜூன் சிங், அவரது பினாமியும் ஐ.ஏ.எஸ். அதிகாரியும், அம் மாநிலஅரசாங்க கலாச்சாரத்துறை கவுன்சிலின் செயலாளருமான வாஜ்பாய், மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், பெண் 'நண்பர்'கள் அடங்கிய ஒரு கூட்டம்தான் இம்மையத்தை தங்களது கேளிக்கை 'கிளப்'பாக பயன்படுத்திவருகிறது. திட்டமிடுவது, அமுல் படுத்துவது, ஆலோசனை வழங்குவது, அங்கீகரிப்பது, அனைவரும் இவர்களே! கணவர் திட்டமிடுவதை, மனைவி அமுல் படுத்துவார்! தாய் அமுல் படுத்தியதை மகன் கண்காணிப்பார்! பெரிய இடத்தின் பெண் நண்பர்கள் ஆலோசனை வழங்க, அதை குடும்ப உறுப்பினர்கள் அங்கீகரிப்பார்கள்!

இது ஏதோ, மிகைப்படுத்துவதற்காகவோ, வருணனைக்காகவோ சொல்லவில்லை. உண்மையில் நடப்பது இது தான்! '83ம் ஆண்டில் இம்மையத்தின் வளர்ச்சிக்காக அரசிடமிருந்து பெற்ற 2.5 லட்ச ரூபாயில் 2 லட்சத்தை, அம் மாநில காங்கிரசு எம்.பி.ஸ்ரீகாந்த் வர்மாவுக்கு, அமெரிக்காவில் சிகிச்சையளிக்க செலவழித்திருக்கிறார்கள். பழங்குடிகளின் கலைகளை வளர்ப்பதற்காக என்று. அதே ஆண்டு அரசிடமிருந்து ரூபாய் 18 லட்சத்தைப் பெற்று வெறும் 71 ஆயிரம் மட்டுமே அத்தலைப்புகளின் கீழ் செலவழித்திருக்கிறார்கள். இம்மாதிரியான நூற்றுக் கணக்கான மோசடிகள், மத்திய தணிக்கைத் துறையால் சமீபத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது.

இதோ, இவர்கள், தொன்மை வாய்ந்த கிரமியக் கலையின் மகத்தொன்னா பிரதிநிதிகள்! விவரிக்க முடியாத தங்கள் குடும்ப ஏழ்மைக்கு மத்தியில் எவர் ஒருவரின் உதவியும் இன்றி கிராமிய கலையின் பாரம்பரியத்தை, அதன் ஜீவனைப் பாதுகாத்து உயிருட்டும் தெருக்கூத்து கலைஞர்கள். அக்கலைக்கு தனியாக ஒரு பல்கலைக் கழகம் வைத்தாலும் அதை நிர்வகிக்கும் முழுத்திறமையுடைய இவர்கள், குறைந்த பட்சம் இத்தொழிலில் கூட முழு நேரமாக கவனம் செலுத்த முடியாமல், ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் விவசாயக் கூலி வேலைகள் செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்கள். நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு குறைந்த விலையிலான, ஆடை, அலங்கார, ஒப்பனைப் பொருட்கள் கூட வாங்க வழியில்லாமல், பழம் புடவைகளையும், கிழிந்த கந்தல்களையும், நேர்த்தியற்ற ஆடை அலங்காரங்களைக் கொண்டும் முழுத்திறமையை வெளிப் படுத்துகிறார்கள். பெரும்பாலும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு அலைந்து திரியும் இவர்கள், செல்லும் இடங்களில் எல்லாம் அக்கிராம மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களுடன் உண்டு, உறங்கி எளிமையாக வாழ்ந்து மடிகிறார்கள்.

ஆளும் கும்பல்கள், கலையை வளர்ப்பதாக, குளிர் பதன அறைகளில், கேளிக்கை விருந்துகளில், மக்கள் வரிப் பணத்தில் அடிக்கும் கும்மாளம் ஒருபுறம்! தங்கள் மண்ணின் கலை இலக்கிய வாழ்வுக்காக தங்கள் உயிரையே கொடுக்கும் மகத்தொன்னா கிராமியக் கலைஞர்கள் மறுபுறம்! இந்த அவமானத்தை நாம் இன்னும் எவ்வளவு நாட்கள் தான் தாங்கிக் கொள்வது?



படிப்பகம்